KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 10 ஜனவரி 2025 இதழ்:- 02

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

# 13வது திருத்தத்தையும் பறி கொடுக்கத் தயாராகும் தமிழ்மக்கள்?

தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புதிய அரசியல மைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதைத் தான் ஜனாதிபதி அனுர குமார திசாநாயகாவிடம் வலியுறுத்தியுள்ளதாக லங்கா சமாஜமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் (08ம் பக்கம் பார்க்க)



**ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலம் வாரம் தோறும் வாசிக்கலாம்**

# ஒப்புக் கொள்ளும் உண்மைகள்




இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் மறைவு தொடர்பாக முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இரங்கல் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலகட்டத்தில் இலங்கை தமிழர் விவகாரத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கினார் என்றும் 2011ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடனான கூட்டறிக்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு முறை ஒன்று ஏற்படுத்தப்படும் என்ற வாக்குறுதியை (16ம் பக்கம் பார்க்க)

# சர்வதேசத்தை உற்று நோக்க வைத்த ட்ரம்பின் ஊடகவியலாளர் சந்திப்பு!

வெள்ளை மாளிகைக்குத் திரும்புவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப், பனாமா கால்வாய் மற்றும் கிரீன்லாந்தைக் கையகப்படுத்துவதற்கு இராணுவ பலத்தை பயன்படுத்துவதை நிராகரிக்க மறுத்துள்ளார். அதேநேரம், கனடாவை 51ஆவது அமெரிக்க மாநிலமாக மாற்றுவதற்கு பொருளாதார சக்தியை பயன்படுத்துவதாகவும் அச்சுறுத்தினார். (25ம் பக்கம் பார்க்க)

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! தாயகத்தில் மாரி மழையுடன் சேர்ந்து பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளை உணவுப் பொருட்கள் மற்றும் உடை, போர்வை போன்ற அத்தியாவசிய தேவை அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENT!
## PREMIER RESULTS !!

22 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com
**Bus: 416-289-3333**


RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch


**Scarborough** $449,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Eglinton/Markham

**Scarborough** $475,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Renovated throughout the years

### Westney Rd / Kingston Rd

**Ajax** $489,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Closer to Highway 401

### Markham / Ellesmere

**Scarborough** $529,990
1+1 Beds • 2 Baths • 4 Rooms
Brand New Penthouse unit

### Mccowan & Hwy 401

**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 6 Rooms
Corner unit offers a prime location

### Markham & 14th Avenue


**Markham** $649,000
2+1 Beds • 2 Baths • 5 Rooms
Open-concept living and dining


### Cornell Meadows / 9th Line

**Markham** $668,000
2 Beds • 3 Baths • 7 Rooms
Upgraded floor, Newly renovated

### Markham & Sheppard

**Scarborough** $679,900
3+1 Beds • 1 Baths • 6 Rooms
New Laminate Floors Throughout

### Altona & Finch

**Pickering** $789,900
3 Beds • 4 Baths • 8+2 Rooms
Freehold Townhouses

### Guildwood Village

**Scarborough** $999,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Basement with separate entrance

### Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### Simcoe / Winchester

**Oshawa** $1,149,000
4 Beds • 4 Baths • 8 Rooms
Easy access to the new 407

### Glen Dhu Dr/Flint Cres

**Whitby** $1,188,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Over $130k on Renovations

### 9th Line/Hoover Park

**Stouffville** $1,339,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Beautifully Landscaped Exterior

# EELANADU

105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 8 பேரும் அமெரிக்கத் தூதுவரிடம் சமஷ்டிக்கு உதவ கோரிக்கை?



உலகின் பல நாடுகளில் இருக்கின்ற மிக உன்னதமான அரசியல் தீர்வாக பார்க்கப்படும் சமஷ்டி அடிப்படை யிலான ஒரு தீர்வுக்காகவே தமிழ் மக்கள் காத்துக் கொண்டிருக்கி றார்கள். நாங்கள் கோரி நிற்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பது நாட்டை பிரிக்கும் நோக்கம் கொண்டதல்ல. எனவே புதிய ஆட்சி யாளர்கள் ஒரு அரசியல் சாசனத்தை கொண்டு வரும் பொழுது அதில் இணைந்த வடக்கு கிழக்கில் அர்த்த புஷ்டியான கௌரவமான நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கள் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலிசங்கிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜஜீலிசங் மற்றும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடை யிலான சந்திப்பொன்று 08 ஜனவரி 2025 புதன்கிழமை மாலை கொழும் பில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக் களின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் எட்டு பாராளு மன்ற உறுப்பினர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி சந்திப்பில் பேசும் போதே தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி விடயத்தை ஒரே குரலில் எடுத்துக் கூறியுள்ளனர். இந்த சந்திப்பு தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவிக்கையில்

புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கப் போவதாக ஆட்சியாளர் கள் கூறி வருகிறார்கள். அவ்வாறு ஒரு அரசியல் சாசனம் உருவாக்கப் பட்டால் அதில் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே எங்களுடைய எதிர்பார்ப்பும் கோரிக்கையும் ஆகும்.

நாங்கள் கோரி நிற்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பது நாட்டை பிரிக்கும் நோக்கம் கொண்டதல்ல. உலகின் பல நாடு களில் இருக்கின்ற மிக உன்னதமான அதிகாரப்பகிர்வு இந்த சமஷ்டி முறைமையாகும். ஆகவே,ஒரே நாட்டுக்குள் ஒற்றுமையாக் இனங் களுக்கிடையில் ஒற்றுமை பலப்பட்டு சுதந்திரமாக அனைத்து இன மக்களும் வாழ வேண்டுமாகவிருந் தால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று அவசியமாகும். அந்த அடிப்படையில் புதிய அரசியல் சாசனம் ஒன்று நாட்டில் உருவாகும் பொழுது மேற்படி தீர்வொன்றுக்கு அரசாங்கம் நகர்வதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டுமென எடுத்துக் கூறினோம்.

அதேபோல் பொறுப்புக்கூறல் விவகார த்தில் அமெரிக்கா தான் ஜெனீவாவில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருந்தது. ஆனால் அத்தீர்மானம் அடுத்த கட்டத்துக்கு நகராமல் இருப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் பின்னடைவாக. எனவே ஜெனீவா தீர்மானத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு அமெரிக்கா கூடியளவில் கரிசனை கொள்ளவேண்டும் என்றும் தூது வரிடம் எடுத்துக்கூறினோம்.

70 வருடங்களாக மாறி மாறி வந்த அரசுகளினால் துன்பங்களை அனுப வித்த இனமாக தமிழர்கள் இருக் கிறார்கள். நாங்கள் (தமிழர்கள்) தான் பசியோடு இருக்கின்றோம். ஏற்கனவே ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுடன் பேசி பேசி தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம். ஆகவே தமிழர்களு க்கான அரசியல் தீர்வு என்பது சமஷ்டி அடிப்படையிலான தீர்வாக இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

அதே போல் வழங்கப்படும் அதிகார ங்கள் மீளப்பறிக்கப்பட கூடாததாக இருக்க வேண்டும். அவ்வாறான தொரு தீர்வு ஏற்படும்பொழுதுதான் இந்த நாட்டில் அனைத்து சமூகங் களும் ஒற்றுமையாக சுதந்திரமாக வாழும் சூழல் ஏற்படும்.இதற்கு பல நாடுகள் உதாரணங்களாக இருக்கி ன்றன என்பதனையும் தூதுவரிட த்தில் சுட்டிக்காட்டினோம்.

அர்த்தபுஷ்டியான கௌரவமான நீடித்து நிலைத்துநிற்கக்கூடிய அரசி யல் தீர்வு என்பது உலகத்தில் சமஷ்டி அடிப்படையில் தான் பகிரப் பட்டிருக்கிறது. ஆகவே தமிழர்களுக் கும் அந்த அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டு மென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதற்கு அமெரிக்கா வும் இயன்ற ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டோம் என சிறீதரன் தெரிவித்தார்.

# தமிழ்க்கட்சிகள் கூடி கலந்துரையாட முடிவு?

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன சந்தித்து கலந் துரையாட தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி இந்த சந்திப்பை நடத்துவதற்கு கட்சிகள் இணங்கியுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் துள்ளார்.

அரசியலமைப்பு விவகாரம், அரசியல் தீவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரை யாடப்படவுள்ளன. தானும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனும் மற்றும் ஜன நாயக தமிழ்த் தேசிய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் சந்தித்தோம். ஏற்கனவே தனித் தனியே சிறிதான் மற்றும் அடைக்கலநாதனை சந்தி த்து இது தொடர்பில் கலந்துரை யாடியுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் சிறீதரனுக்கு, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் சந்திப்பை மேற்கொள்ள கட்சி சார்பில் அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். தனிப்பட்ட முறை யில் பாராளுமன்றத்தில் அல்லது



உணவகத்தில் சந்திக்கும் போது பல்தரப்பட்ட பிரச்சனைகளைக் கதைப்போம். அப்படி ஒன்றாக இது வும் இருக்கலாமே தவிர கட்சி ரீதி யாக முடிவெடுக்கப்படவில்லை என் றார்.


**Balachandran Law Office**

**Balachandran Muthaiah**

**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544**

# யாழ்.நெல்லியடிப் பகுதியில் அநுராவின் பெயரில் நிதி மோசடி செய்த மத போதகரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள்





யாழ்ப்பாணம் நெல்லியடிப் பகுதியில் தேசிய மக்கள் சக்தி மற்றும் அநுர குமார திசாநாயக்கவின் பெயரைப் பயன்படுத்தி நிதி சேகரிப்பில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

08 ஜனவரி 2025 புதன்கிழமை இடம் பெற்ற இந்த சம்பவத்தின் போது மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என தன்னை அறிமுகப்படுத்திய மத போதகர் ஒருவரும் மற்றுமொரு வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், கடந்த ஒரு வார காலமாக தேசிய மக்கள் சக்தியினை யும் அநுரகுமார திசாநாயக்கவின் பெயரையும் பயன்படுத்தி தம்மை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என அறிமுகப்படுத்தி குறித்த இரு வரும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று நெல்லியடி நகரில் நிதி சேகரிப்பில் ஈடுபட்ட போது நிதி வழங்க மறுத்தவர்களை அநுரவின் பெயரைக் கூறி ஒளிப்படத்தைக் காண்பித்து அச்சுறுத்தி நிதியை வலுக் கட்டாயமாக பெற முற்பட்ட போது வர்த்தகர்களுக்கும் அவர்களு க்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு கூடிய வர்த்த கர்கள் குறித்த நபர்களை மடக்கிப் பிடித்து விசாரணை மேற்கொண்டு நெல்லியடி காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இந்த நிலையில் காவல் நிலையத்தில் வைத்து விசாரணைகளை மேற் கொண்ட காவல்துறையினர் குறித்த நபர்களை கடுமையாக எச்சரித்து விட்டு விடுவித்துள்ளனர்.

நிதி சேகரிப்பில் ஈடுபட்ட மதபோதகர் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்று தன்னை அறிமுகப்படுத்தி யதுடன் சிறுவர்களைப் பராமரிப்பதற் காகவே இந்த நிதியை பயன் படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். எனினும் அதற்கான பற்றுச் சீட்டு க்கள் எவற்றையும் வழங்கவில்லை.

இதேவேளை நிதி கொடுக்க மறுத்த வர்களை எலிக்காய்ச்சல் வந்து இறப்பாய் என்றும், அநுரவை நான் தான் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்தேன் எனவும் அநுர ஆட்களைப் பற்றித் தெரியும் தானே என அச்சுறு த்தியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் குறித்த மதபோதகர் கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடைகளில் ஆசி யுரைகளை கூறியதுடன் அநுர அரசுக்கு ஆதரவு கோரி ஆசியுரை களை வழங்கி வந்தவர் என தெரி விக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

## ஞானசார தேரருக்கு 9 மாத சிறை




இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்திற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரு க்கு 9 மாத சிறைத்தண்டனையை நேற்று வியாழக்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

அத்துடன் , 1,500 ரூபாய் அபராதம் விதிப்பதாகவும் தீர்ப்பை அறிவித்து கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, உத்தரவிட்டார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசார ணைக்கு நீதிமன்றில் ஆஜராகத் தவறியமையால் முன்னர் பிறப்பிக்கப் பட்ட பிடியாணையை அடுத்தே அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தேரர் சார்பில் ஆஜரான சட்டத் தரணி காமினி அல்விஸ், மேன் முறையீட்டு மனு மீதான விசா ரணை நிலுவையில் உள்ள நிலை யில் தனது கட்சிக்காரருக்கு பிணை வழங்கக் கோரிய உண்மைகளை முன் வைத்தார். மாஜிஸ்திரேட் ஜாமீன் மனுவை நிராகரித்தார்,


# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%


- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam** BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# வடக்கு கிழக்கில் அதிகளவு தமிழ் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை - பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு!

வடக்கு — கிழக்குப் பகுதிகளில், அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதற்கு சிறப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பொலிஸ் வெற்றிடங்கள் தமிழ்ப் பொலிஸாரை வைத்து மிக விரைவாக நிரப்பப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது

இலங்கையின் அனைத்துப் பகுதிகளைப் போலவே வடக்கிலும் எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல் பொலிஸாரால் பணியாற்ற முடியும்.



கடந்த காலங்களைப் போல் அல்லாமல் பொலிஸாரின் சுதந்திரமான செயற்பாட்டை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

சட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதற்குப் பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. சட்டத்தின் அடிப்படையில் செயற்படும் போது பொலிஸாருக்கு ஏதேனும் அழுத்தம் முன் வைக்கப்பட்டால், அது தொடர்பில் எனக்குத் தெரிவியுங்கள். நிச்சயம் நான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வேன்.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் இருந்து அதிகளவான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அத்துடன் வடக்கில் நிலவும் இதர பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படும் என்றார்.

# யாழ் மக்கள் பயப்படத் தேவையில்லை!
## யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாண மக்கள் பயப்படத் தேவையில்லை. பொதுமக்கள் அச்சமின்றி செயல்படவும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றவும் பொலிஸார் தயாராக இருக்கின்றார்கள் என யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ் நகரில் புத்தாண்டிக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கேள்வியெழுப்பிய போது மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனை தெரிவித்தார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் யாழ் நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம். இரண்டு சம்பவங்களையும் குறித்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலதிக சாட்சிகளை எடுத்து மிகுதியான சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளோம். இதற்குரிய ஆலோசனைகள் என்னால் உயர் அதிகாரிகளுக்கும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் பிடித்து குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் 81வது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் குறித்த நபர்கள் அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக கட்டுக்கோப்பான சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆணையை பெற்று வருகின்றோம்.



குறித்த நபர்கள் எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து குறித்த குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அதிக தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற ஆணையில் குற்றவியல் சட்டக்கோவையின் 81 வது பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்து வருகின்றோம் என்றார்.

# யாழில் மீண்டும் சோதனைச் சாவடிகள்?

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவுற்ற பின்னரும் கூட பல வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

குறித்த சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற பின்னர் அங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன.

இவ்வாறான நிலையில் திடீரென அகற்றப்பட்ட அந்த சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அனுர அரசாங்கம் சோதனைச் சாவடிகளை தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைக்கின்ற இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகத்தையும் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவுடன் பேசுவோம்!



ரஷ்யப்படையில் வடபகுதி இளைஞர்கள் வலிந்து இணைக்கப்பட்டுள்ளமை உட்பட இலங்கையர்கள் போரில் ஈடுபடுத்தப்படுகின்றமை தொடர்பில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் விஜித ஹேரத் விரைவில் உத்தியோகபூர்வமான பேச்சுக்களை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா போராட்டக்காரர்களுடனான கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த முகவர்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணையொன்றை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு முன்னாலுள்ள சுற்றுவட்டத்தில் ரஷ்யப்படையில் தமது உறவுகள் வலிந்து இணைக்கப்பட்டு போரில் ஈடுபடுத்தப்படுவதாகத் தெரிவித்து நான்கு தாய்மார் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் சிவில் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கும், பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரவுக்கும் இடையிலான சந்திப்பு வெளிவிவகார அமைச்சின் பிரதி அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரஷ்யப்படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத் தருமாறு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும், வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாகவும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 06 ஜனவரி 2025 ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ரஷ்யப் படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் தாய்மாரும், வென்னப்புவவைச் சேர்ந்த தாயொருவரும், குறித்த வலிந்து இணைக்கப்பட்ட நிலையில் காயமடைந்துள்ள கணவருக்காக முல்லைத்தீவைச் சேர்ந்த துணைவியார் ஒருவருமான ஐவர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டத்தில் சிவில் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான ஷெரீன் சரூர், சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம், ராஜ்குமார் ரஜீவ்காந் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

# புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சிகளை தாமதமின்றி ஆரம்பிக்குமாறு ஆயர் கோரிக்கை

புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தாமதமின்றி ஈடுபடவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார். தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் தனது பதவிக் காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதியஅரசமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ணவுடனான சந்திப்பின் பின்னர் கர்தினால் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சிக்கு புதிய அரசியலமைப்பின் தேவை எழுந்துள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஜனநாயகத்திற்கு எதிரான ஊழல் மோசடிகளை விசாரணை செய்வதற்கான வலுவான பொறிமுறையை உருவாக்குவதற்கு புதிய அரசியலமைப்பு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான தகவல்களை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியம். இதை யார் செய்தார்கள், எந்த நோக்கத்திற்காக, யாருடைய உதவியோடு செய்தார்கள் என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இலங்கையில் கடந்த காலங்களில் இதுபோன்ற பல சம்பவங்கள் நடந்துள்ளன. கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டமை. போன்ற பல விடயங்கள் உரிய முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

ஜனநாயகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல்கள் குறித்து விசாரணை நடத்த தேவையான பொறிமுறையை தயார் செய்ய வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோள்.

அதற்கு தேவையான அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தற்போதுள்ள அரசியலமைப்பில் உள்ள சில பலவீனங்களை போக்க புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்'' என்றார்.

# கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ பதவி விலகினார்!

கனடாவில் எதிர்பார்க்கப் பட்டபடியே, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். வரும் புதன்கிழமை கனடாவை ஆளும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடவிருந்த நிலையில் ட்ரூடோ தனது ராஜினாமா அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.



கனடாவின் ஒட்டாவா நகரில் உள்ள தனது வீட்டில் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், 2015ஆம் ஆண்டில் பிரதமரான கணம் முதலே கனடாவுக்காகவும் கனேடிய மக்களுக்காகவும் பாடுபட்டு வந்துள்ளேன். நடுத்தர மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்துள்ளேன். கொரோனா தொற்று காலத்தில் மக்கள் ஒருவருக்கு ஒருவர் தோள் கொடுத்ததை கண்ணுற்றேன். வட அமெரிக்க கண்டத்தில் தடையில்லா வர்த்தகம் நீடிக்க உழைத்தேன்' என்றார்.

தனது கடந்த கால செயல்பாடுகளை விவரித்த பிறகு அவர் தனது பதவியை ராஜினாமா செய்வது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். கட்சியின் தலைவர் மற்றும் பிரதமர் பதவியில் இருந்து விலக விரும்புவதாக அறிவித்த அவர், அடுத்த தலைவர் தேர்வு செய்யப்படும் வரை தற்போதைய பதவியில் நீடிப்பேன் என்றார்.

குடும்பத்துடன் நடத்திய நீண்ட ஆலோசனைக்குப் பிறகு பதவி விலகும் முடிவுக்கு வந்ததாக அவர் கூறினார். தனது வெற்றிக்கு அவர்களது ஆதரவே காரணம் என்று அவர் கூறினார். தனது பதவி விலகல் முடிவு குறித்து நேற்றைய இரவு உணவின் போது குழந்தைகளிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

உட்கட்சி பிரச்சனைகளை கவனிக்க வேண்டியிருந்ததால் கனடா மக்கள் தேர்ந்தெடுத்த சிறந்த பிரதமராக தம்மால் இருக்க முடியவில்லை என்று தெளிவாகி விட்டது என்று அவர் தெரிவித்தார். கனடா நாடாளுமன்றம் பல மாதங்களாக செயல்படாமல் முடங்கிக் கிடக்கிறது. அது மார்ச் 24-ம் தேதி வரை ஒத்தி வைக்கப்படும்' என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ட்ரூடோ, 'கனடா நாட்டின் அரசியலை மீண்டும் மாற்றியமைக்க வேண்டிய நேரம் இது. இதன் மூலம் அரசியல் சூழலில் உள்ள பதற்றம் குறையும்', என்றார்.

மேலும் கனடா மக்கள் எதிர்கொள்ளும் சிக்கலான பிரச்னைகளில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று அவர் கூறினார்.

அவர் யாரும் எதிர்பாராத சமயத்தில், 2015 இல் தனது கட்சியை அதிகாரத்திற்கு கொண்டு வந்தார். அப்போது 43 வயதாக இருந்த ட்ரூடோ, அரசியலில் புதிய முகமாகவும் இளம் தலைவராகவும் இருந்தார். வெளிப்படையான குடியேற்றக் கொள்கையை மையமாகக் கொண்ட ஒரு புதிய வகையான அரசியலை உறுதியளித்தார். செல்வந்தர்கள் மீதான வரிகளை அதிகரித்தார் மற்றும் கால நிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டங்களுக்கு ஆதரவளித்தார்.

ஆனால் அவரது முதல் பதவிக் காலத்தில் ஊழல் புகார்கள் எழுந்தன. மிக சமீபத்திய ஆண்டுகளில், கனடாவில் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினம் மற்றும் அவரது ஆட்சி மீதான விரக்தி காரணமாக அவரின் செல்வாக்கு குறைந்து வருகிறது.

கியூ பெக், ஒன்டோரியோ மற்றும் அட்லாண்டிக் கனேடிய மாகாணங்களைச் சேர்ந்த டஜன்கணக்கான, ட்ரூடோவின் சொந்தக் கட்சி எம்.பி.க்கள் அவரை பதவி விலகுமாறு வலியுறுத்தியுள்ளனர். கருத்துக் கணிப்புகளில் பங்கேற்ற மூன்றில் இரு பங்கு பேர் ட்ரூடோ மீது அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

செப்டம்பர் மாதம் Ipsos' தளத்திற்கு பதிலளித்தவர்களில் 26வீத பேர் மட்டுமே ட்ரூடோ பிரதமருக்கான சிறந்த தேர்வு என்று கூறினர். அந்த கருத்துக்கணிப்பில் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரேவை விட 19 புள்ளிகள் பின்தங்கி இருந்தார் ட்ரூடோ.

கனேடிய அரசியல் வரலாறும் ட்ரூடோவுக்கு சாதகமாக இல்லை. கனடாவில் இதுவரை இரண்டு பிரதமர்கள் மட்டுமே தொடர்ந்து நான்கு முறை பதவி வகித்துள்ளனர்.

வரிகளைக் குறைப்பது, பண வீக்கத்தைச் சமாளிப்பது மற்றும் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பது போன்ற வாக்குறுதியின் பேரில் 2022 இல் பொய்லிவ்ரே (Poilievre) தனது கட்சியின் உயர்மட்டத்திற்கு உயர்ந்தார்.

45 வயதான அவர் கோவிட் ஆணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஃப்ரீடம் கான்வாய் டிரக்கர்களுக்குப் பின்னால் ஆதரவைத் திரட்டினார் - இது ஒட்டாவா உள்ளிட்ட கனேடிய நகரங்களை ஸ்தம்பிக்கச் செய்த முற்றுகை ஆகும்.

கனடாவின் அடுத்த பிரதமர் டிரம்பின் அச்சுறுத்தலுக்கு தீர்வு காண வேண்டும். ஒழுங்கற்ற குடியேற்றம், சட்ட விரோத போதைப்பொருள் விற்பனை ஆகியவற்றுக்கு எதிராக, அமெரிக்காவுடனான தனது எல்லையை கனடா பாதுகாக்கவில்லை என்றால் கனேடியப் பொருட்களுக்கு 25வீத வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இது 'கடுமையான சவால்' என முன்னாள் கனடா நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்டின் ராஜினாமா கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தனது வருடாந்திர பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு சில மணிநேரத்திற்கு முன்பு பதவி விலகினார்.

'நான் ட்ரூடோ அரசாங்கத்தின் உயர் மட்ட பொருளாதார ஆலோசகராக இருப்பதை அவர் விரும்பவில்லை என என்னிடம் தெரிவித்தார்' என்றும் கிறிஸ்டியா கூறினார்.- BBC

# தமிழினப் படுகொலைக் குற்றவாளிகள் பொறுப்புக் கூற வேண்டும்! தொடர்ந்து வலியுறுத்துவோம் என்கிறது கனடா கன்சர்வேட்டிவ் கட்சி!

கனடாவில் இம்மாதம் தமிழர் மரபுரிமை மாதமாகக் கொண்டாடப்படுகின்ற போதிலும், அதற்குரிய முழுமையான கௌரவம் இன்னமும் அடையப்படவில்லை. ஏனெனில் மிக மோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே அக்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை நாம் தொடர்ந்து உறுதியாக வலியுறுத்துவோம் என கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ்ர் தெரிவித்துள்ளார்.

தமிழர் மரபுரிமை மாதத்தை முன்னிறுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் அவர், இது பற்றி மேலும் கூறியிருப்பதாவது: நாம் ஜனவரி மாதம் முழுவதும் கடும் உழைப்பாளிகளைக் கொண்டாடுகின்றோம். கனடாவில் வாழும் தமிழர்கள் அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல தசாப்தகாலமாக எமது சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் இப்பாரம்பரிய வரலாறு பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். அவர்களது பாரம்பரிய கலாசாரமானது மொழி, இசை, கலை மற்றும் உணவுப் பழக்க வழக்கங்கள் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது.

பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்பம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஊடாக வழிநடத்தப்படும் கனேடியத் தமிழர்களால் இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வணிக நிலையங்கள், கலாசார அமைப்புக்கள் மற்றும் சமூக ஊடக நிலையங்கள் என்பன கனேடிய சமூகத்தையும், பொருளாதாரத்தையும் சீரமைப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

இருப்பினும் நாம் கொண்டாடும் இந்த தமிழ் மரபுரிமை மாதம் துரதிஷ்டவசமாக அதற்குரிய முழுமையான கௌரவத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை மிகமோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியினரான நாம் இந்த தமிழர் மரபுரிமை மாதத்திலும், இவ்வாண்டு முழுவதும் மேற்குறிப்பிட்டவாறான மிகமோசமான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்துவோம்.



அதேவேளை கனடாவில் வாழும் தமிழ்ச்சமூகத்தினரைக் கொண்டாடுவதில் நாம் பெருமையடைகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி!



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவை வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, பிரதமர் நரேந்திர மோடி இந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்வார் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதால், வருகைக்கான குறிப்பிட்ட திகதிகள் தீர்மானிக்கப்படவில்லை.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த டிசம்பரில் புதுடெல்லிக்கு விஜயம் செய்திருந்த போது விடுத்த அழைப்பின் பிரகாரம் இந்த விஜயம் இடம் பெற்றுள்ளது.

அநுரகுமாரவின் இந்தியப் பயணம், பதவியேற்ற பின்னர் அவரது முதல் சர்வதேச விஜயமாக அமைந்தது.

அநுரகுமாவரின் தெரிவைத் தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் செய்த முதலாவது உயர்மட்ட வெளிநாட்டு அதிகாரி இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்சங்கர் ஆவார்.

இதற்கு முன்பு பிரதம் மோடி 2015 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓயாத புலம்பலில் அர்ச்சுனா!



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்றில் தான் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தொடர்ந்தும் சிக்கல்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களினது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் உள்ளது. எனினும் அதற்கான நடவடிக்கையை சஜித் பிரேமதாச எடுக்கவில்லை என அர்ச்சுனா எம்.பி குற்றம் சுமத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்தது மேலே பார்த்துக் கொண்டிருந்து விட்டு வீடு செல்வதற்கு இல்லை. தனக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் நாடாளுமன்றம் வந்தும் பயனற்ற நிலைமை உள்ளதாக அருச்சுனா தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன, எதிர்க்கட்சி பிரதம கொறடாவுக்கு தொடர்பில் உரிய கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். அர்ச்சுனா எம்.பியின் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்க விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

தேர்தலிற்கு முன்னதாக சஜித் பிறேமதாசாவுடன் கூட்டுச்சேர அருச்சுனா முற்பட்டிரந்த போதும் அம்முயற்சி சாத்தியப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தேர்தல் கால சஜித் பிறேமதாசா தரப்பு பிரச்சார மேடையிலிருந்து அருச்சுனா வெளியேற்றப்பட்டுமிருந்தார்.

அதேவேளை தன்னை எதிர்கட்சி அலுவலகத்தில் வைத்து சஜித் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கியதாக கடந்த காலத்தில் குற்றச ்சாட்டுக்களை அருச்சுனா எம்.பி முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இஸ்ரேலிய மத ஸ்தலங்கள் தொடர்பான அரசின் பதில்

இஸ்ரேலிய மத ஸ்தலங்களையோ அல்லது அது போன்ற இடங்களையோ நிர்மாணிப்பதற்கு எந்தவொரு அரசாங்க நிறுவனமும் இதுவரை அனுமதி வழங்கவில்லை என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

08 ஜனவரி 2025 நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது வை, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு அல்லது அதன் எந்தவொரு திணைக்களமும் இஸ்ரேலிய பிரஜைகளால் மத ஸ்தலங்களையோ அல்லது அது போன்ற இடங்களையோ நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை.

எனினும், இவ்வாறான நிலையங்கள் பராமரிக்கப்படுவதை நாம் அறிவோம். அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்று நிலைமையை அவதானித்துள்ளோம். அத்தகைய அனுமதி இதுவரை வழங்கப்படாததால் இந்த நடவடிக்கைகள் அனுமதியின்றி நடைபெறுகின்றன என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

அதேநேரம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வெளியுறவு அமைச்சகம் தலையிட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

எவ்வாறெனினும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரேலியர்களுக்கான மத மற்றும் கலாச்சார மையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தினார்.

இது போன்ற இடங்களில் பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



இந்த வழிபாட்டுநிலையங்களிற்கு அனுமதி வழங்கவில்லை, இந்த விடயத்தில் நாங்கள் விரைவில் தலையிடுவோம், என தெரிவித்துள்ள பிரதமர் எனினும் அருகம் குடா விவகாரத்தை தொடர்ந்து நாங்கள் யூ தர்களின் வழிபாட்டு தலங்களிற்கு பாதுகாப்பை வழங்கவேண்டிய நிலையில் உள்ளோம்.இது சுற்றுலாப்பயணிகள் குறித்த நாடொன்றின் கடப்பாடு.என அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்கில் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை அறியாத இன்றைய தலைமுறை



வடக்கிலும் கிழக்கிலும் தலைமைத்துவம் என்றால் என்ன பண்பு, பண்பாடு பக்குவம் என்ன என்று தெரியாத நிலையில் இன்றைய தலைமுறை இருக்கின்றது. இன்றைய தலைமுறைக்கு யார் தலைவர், தலைமை யார், தலைவருக்கு இருக்க வேண்டிய பண்பு என்ன, பண்பாடு என்ன பக்குவம் என்ன என்பதை தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் பல துன்பங்களை துயரங்களை அனுபவித்து வருகின்றோம் என சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அன்னை, சிவத் தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி ஜனனதினம் 07 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் அன்னபூரணி மண்டபத்தில் அதன் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய சூழலில் விமர்சனங்கள் பேசுவது வீண் வார்த்தைகள் பேசுவது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது இதனால் ஈழத்தமிழர்களுக்கு விடிவு இல்லாது இருக்கின்றார்கள் வீண் வார்த்தைகள் பேசுபவர்கள் ஒழுங்கான விடையங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டும் இவ்வாறான விடயங்களை செய்பவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள்.

வீண்வார்த்தை பேசுவதை விட பயனுள்ள விடயங்களைச் செய்வார்கள் என்றால் சமூகம் பயன் பெறும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தூர நோக்கம் தீர்க்க தரிசனம் காரணமாக கோவில், அன்னையின் பிள்ளைகள், பெரும் விருட்சமாக வளர்ந்து சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றார்கள்.

அன்னையின் பணிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அன்னையைப் பற்றிய நூல்கள் அன்னையின் பாடல்கள், சைவ நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிட்டு வருகின்றனர் நூற்றாண்டு மலரையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

பெற்ற தாய் தகப்பனுக்கு மாடி வீடு கட்டியிருந்தாலும் அவர்கள் இல்லாத போது துவசம் செய்வார்கள் பின்னர் கோவிலில் அர்ச்சணை செய்வர்கள் அதன் பின் மறந்து விடுவார்கள் ஆனால் எங்கள் அன்னைக்கு வருடத்தில் இரண்டு நாட்கள் திருவிழாக்கள் எடுத்து வருகின்றோம்.

அன்னையின் நிழலில் வாழுகின்ற பிள்ளைகள் கல்வி கற்று பட்டதாரிகளாக்கி ஆலயச் சூழலில் வீடுகளை கட்டி வழங்கியுள்ளோம்.

அன்னையின் தீர்க்க தரிசனத்தால் கோவில்கள் சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது அன்னையின் பெயரில் பல நிதியங்களை உருவாக்கி வைத்தியசாலைகள், பாடசாலைகள் உதவிகள் செய்து வருவதோடு பசியோடு வருபவர்களுக்கு உணவுகளை வழங்கி வருகின்றது.

பல சத்திரங்கள் மடங்கள் இருந்த நிலையில் இன்று அவை கொத்துரொட்டிக் கடைகளாக மாறியுள்ளது பல மடங்கள் குறிப்பாக அன்னை சத்திர மடம் கடையம்மா மடம் கந்தர் மடம் இன்று இல்லாது போயுள்ளது.

எத்தனையே சிறந்த தலைமைத்துவங்களைக் கொண்ட வடக்கு கிழக்கில் இன்றைய தலைமுறைக்கு தலைமைத்துவம் என்றால் என்ன தலைமைத்துவத்திற்கு இருக்க வேண்டிய பண்பு பண்பாடு பக்குவம் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள் இந்த நிலையில்தான் துன்பங்கள் துயரங்களை நாங்கள் அனுபவித்து வருகின்றோம் என்றார்.

# 13வது திருத்தத்தையும் பறி கொடுக்கத் தயாராகும் தமிழ்மக்கள்?

தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதைத் தான் ஜனாதிபதி அனுர குமார திசாநாயகாவிடம் வலியுறுத்தியுள்ளதாக லங்கா சமாஜமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த போது அவ் அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றிற்கான நிபுணர் குழு நியமிக்கப்பெற்று அக்குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளித்த அறிக்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாமல் வலியுறுத்த முடியாமல் இருந்தவர் தான் பேராசிரியர் திஸ்ஸவிதாரண.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான 'நல்லாட்சி'க் காலத்தில் (2015–2019) பிரதமர் ரணில் விக்கிரமசிங்க–இரா சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சிக் கூட்டின் மூலம் தயாரான புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையுடன் எல்லாமே நின்று போனது. அதனைத் தொடரப் போவதாகத் தான் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை உள்ளடக்கி மக்கள் ஆணையையும் பெற்றிருக்கிறார். அதனைத் தொடர்ந்து பாராளுமன்றப் பெரும்பான்மையையும் மூன்றில் இரண்டுக்கும் அதிகமாக அவர் பெற்றிருக்கிறார்.



தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கைத் தயாரிப்பில் தீவிரமாகச் செயற்பட்டவருமான எம் ஏ சுமந்திரன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்கள் கொடுத்த ஆணையை விரைவில் நிறைவேற்ற வேண்டும் அதாவது புதிய அரசியலமைப்பை (சமஷ்டியை உள்ளடக்கிய) விரைவில் கொண்டு வரவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இத்தகைய அறிவிப்புகள்–உறுதிமொழிகள்–கோரிக்கைகள் எல்லாமே கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கின்றன. ஆனால், இவையெல்லாம் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புண்ணுக்குப் புனுகு தடவுகின்ற வேலைகள் தான்.

புதிய அரசியலமைப்பு வரலாம். ஆனால் புதிய அரசியலமைப்பின் மூலம் தற்போதுள்ள 13ஆவது திருத்தத்திற்குமேல் கடுகளவு கூடிய அதிகாரப் பகிர்வைத்தானும் வழங்கப் போவதில்லை. அதாவது அது எவ்வகையிலும் 13+ஆக (13 பிளஸ்) இருக்கப் போவதில்லை. ஒரு வாதத்திற்கு அப்படி புதிய அரசியலமைப்பு நகலில் 13+ உள்ளடக்கப்படலாம் என வைத்துக் கொண்டாலும் அது முழு இலங்கையிலும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அது தமிழர்களைப் பொறுத்தவரை எதிர்மறை விளைவையே தரும்.

புதிய அரசியலமைப்பின் மூலம் தற்போதுள்ள 13 ஆவது திருத்தம் இல்லாமல் போகும் நிலை ஏற்படுமானால் அதிகாரப் பகிர்வைப் பொறுத்த வரை தமிழர்கள் வெறுங்கையுடன் தான் நிற்க வேண்டிய நிலையேற்படும்.

புதிய அரசியலமைப்பைத் தமிழர்கள் நம்பியிருப்பது இறுதியில் இலவு காத்த கிளியின் கதையாகவே முடியும். புதிய அரசியலமைப்பு தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு 'மாயமான்'. அதன் பின்னால் போவது ஆபத்தைத்தான் கொண்டுவரும். தமிழ் மக்களுக்குத் தற்போது இருக்கக்கூடிய ஒரே ஒரு 'கவசம்' 13 ஆவது அரசியல் திருத்தமும் அதன் விளைவான மாகாண சபைகள் சட்டமுமே.

அதனை முறையாகவும் முழுமையாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் அமுல் செய்வதற்கான அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி தாம் வாக்களித்துத் தெரிவு செய்த அரசியற் பிரதிநிதிகள் மீது அழுத்தம் கொடுப்பதற்கான களவேலைகளைத் தமிழர்கள் மத்தியிலேயுள்ள ஏனைய அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் தாமதியாது தொடங்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தின் முழுமையான முறையான அமுலாக்கல் முழுக்க முழுக்கத் தமிழர்களுடைய தேவையாகும். அதில் தமிழர்களுக்கு அக்கறை ஏற்படாதவரை இலங்கை அரசாங்கமோ–இந்திய அரசாங்கமோ அது எந்தக் கட்சி அரசாங்கமாக விருந்தாலும் அக்கறைப்படப் போவதில்லை.

# போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர் கொள்ளும் இராணுவத்தைக் காப்பாற்ற அநுராவும் தயார்! ஜெனிவாவுக்கு பதிலளிக்க விசேட இராஜதந்திரக் குழு ஊடாக நடவடிக்கை!

அனுர அரசும் போர்க்குற்றச்சாட்டுக்களை எதிர் கொண்டுள்ள படைகளை காப்பாற்றும் வகையிலான உள்ளக விசாரணைகளை மையப்படுத்தி நகரத்தொடங்கியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், விசேட இராஜதந்திரக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன், 58ஆவது அமர்வுக்கு முன்னர் சிறப்பறிக்கையை வெளியிடவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தத்தீர்மானத்தின் நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில்




கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனினும் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

ஆனால் ஐ.நா.தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் பொறுப்புக்கூறும் விடயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான அறிக்கையைக் கூடிய விரைவில் அரசு முன்வைக்கவுள்ளது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்குப் பதிலளிப்பதாக அல்லாது எமது அரசின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசின் வெளிப்படைத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையிலேயே எமது சிறப்பு அறிக்கை அமையும். இதற்காக இலங்கையின் விசேட இராஜதந்திரக் குழு செயற்படும். என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 78375 வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் செயற்பாட்டடில் ஈடுபட்டு வரும் ஸார்ப் நிறுவனத்தினால் எழுபத்தெட்டாயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து (78375) அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதை தொடர்ந்து மக்களின் மீள்குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், உட்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் உள்ளூர் பணியாளர்களை கொண்டு வெடி பொருட்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் செயற்பாடுகளில் ஸார்ப் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது

தொடர்ந்து குறித்த நிறுவனம் கண்ணி வெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி, மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தகவலை ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கேப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

# ஸ்ரீலங்காவை கிளீன் செய்வது?

**– நிலாந்தன் –**

அண்மையில் ஐரோப்பாவில் வசிக்கும் பிரபல்யமான ஒரு எழுத்தாளர் என்னைக் காண வந்திருந்தார். அவரை அழைத்துக் கொண்டு வந்தவர் ஒரு இளம் அரச ஊழியர். என்னுடைய மாணவர். அவர் சொன்னார்,

தான் வெளிநாட்டுக்குப் போக போவதாக. ஏன் நாட்டில் இருந்து உழைக்க முடியாது என்று நம்புகிறீர்களா என்று கேட்டேன். ஓம் நான் ஒரு வீடு கட்டினேன். கிட்டத்தட்ட மூன்று மில்லியன் ரூபாய்கள் கடன். கடனை அடைக்க என்னுடைய மாதச் சம்பளத்திலிருந்து பெரிய தொகை போகிறது. அதனால் வீட்டுச் செலவுகளுக்கு அம்மாவும் அப்பாவும் ஒரு கடை வைத்திருக்கிறார்கள். அந்தக் கடைக்கான முதலீடு கூட புலம் பெயர்ந்த நண்பர்கள் சிலர் தந்தது தான்.

ஒரு அரச ஊழியனாக என்னால் அந்தக் கடனைக் கட்டி முடிப்பது கடினமாக உள்ளது.ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரை அது ஒரு சிறு காசு என்ற படியால் தான் ஒரு கடனாளியாகவே இருப்பதை விடவும் புலம் பெயரலாம் என்று முடிவெடுத்தேன் என்று சொன்னார்.

அப்பொழுது அவரோடு வந்த எழுத்தாளர் சொன்னார், அவர் சொல்வது சரி. ஊரில் ஒரு செத்த வீடு. என்னுடைய வயதுக்காரர் பலர் வந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் கிழடு தட்டி பற்களும் விழுந்து வயதை விட கூடுதலான அளவுக்கு முதியவர்களாகக் காணப்பட்டார்கள். வாழ்க்கை அவர்களுக்கு கடுமையானதாக சுமையானதாக மாறி விட்டது போலும். என்று. அதாவது தமது அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதற்கு கஷ்டப்படும் ஒரு வாழ்க்கை.ஒரு சுமையாக மாறிய வாழ்க்கை.

கடந்த மாதம் நடுப்பகுதியளவில் வந்த புள்ளி விவரங்களின்படி, முழு நாட்டிலிருந்தும் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தொழில் தேடி புலம் பெயர்ந்து விட்டார்கள். இவர்களில் எத்தனை விகிதத்தினர் நாட்டில் தொழில் துறைகளோடு இருந்தவர்கள் என்பதும், எத்தனை விகிதத்தினர் தமிழர்கள் என்பதும் தெரியவில்லை. ஆனால் முழு நாட்டிலிருந்தும் வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டின் முடிவு வரை 20 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருக்கிறார்கள். இருபதாவது லட்சம் ஆள் தாய்லாந்தில் இருந்து வந்த ஒரு ஊடகவியலாளர். அதை சம்பந்தப்பட்ட இலங்கை அமைச்சுக் கொண்டாடியது.

கொண்டாடட்டும் ஒருபுறம் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம். இன்னொரு புறம் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் இருந்து தப்பி ஓடுவது போல ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வெளியேறும் பலரும் படித்தவர்கள், பட்டதாரிகள்,குறிப்பாக சுகாதார, மருத்துவத் துறை சார்ந்தவர்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவர்களில் சிறு தொகையினர் திரும்பி வருகிறார்கள் என்பது இந்த மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் பண்புகளில் ஒன்று.

நாடு பொருளாதார ரீதியாக முன்னரை விடக் கூடுதலாக முன்னேறியிருப்பதாக அரச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த நாட்டிலிருந்து உழைக்க முடியாது என்று நம்புபவர்களின் எண்ணிக்கை இன்னமும் குறையவில்லை.

இலங்கைத் தீவைப் போலவே பொருளாதார நெருக்கடி வந்த கிரீஸ், அர்ஜென்டினா ஆகிய இரண்டு நாடுகளிலும் கிரீஸ் ஒப்பீட்டளவில் முன்னேறியிருப்பதாக அண்மைக்காலப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன. ஆனால் அர்ஜென்டினா இப்பொழுதும் தடுமாறுவதாகத் தெரிகிறது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட நாடுகளில் ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் தொடர்ச்சியாக அரசாங்கங்கள் மாறியிருக்கின்றன. அல்லது நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அர்ஜென்டினா, கிரேக்கம் ஆகிய நாடுகளில் அரசாங்கங்கள் அடிக்கடி மாறின. நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். நாடு மறுபடியும் நிமிர்ந்து நிற்க பல மாதங்கள் எடுத்தன. உதாரணமாக கிரேக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள் எழு தடவைகள் அரசாங்கம் மாறியது. அர்ஜென்டினாவில் ஐந்து தடவைகள் அரசாங்கம் மாறியது. ஐந்து தடவைகள் நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்.





இலங்கைத் தீவிலும் கடந்த நாலாண்டு காலப் பகுதிக்குள் மூன்று அரசாங்கங்கள் வந்து விட்டன. நான்கிற்கு மேற்பட்ட நிதியமைச்சர்கள் வந்து விட்டார்கள். பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட எல்லா நாடுகளிலும் இது தான் நிலைமை.

இப்பொழுது நாட்டை ஆளும் என்பிபி அரசாங்கம் நிரந்தரமானதா இல்லையா என்பது அது பொருளாதாரத்தை எந்தளவுக்கு நிமிர்த்தும் என்பதில் தான் தங்கி இருக்கிறது. அது எந்த அளவுக்கு பேரரசுகளின் இழு விசைகளுக்குள் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளப் போகிறது என்பதில் தான் தங்கியிருக்கின்றது.

என்பிபிக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பார்த்துப் பிரமிக்கும் பலரும் ஒரு விடயத்தை மறந்து விடுகிறார்கள். என்பிபி பெற்ற வெற்றி என்பது ஒரு விதத்தில் பொருளாதார நெருக்கடியின் விளைவு. எனவே பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவில்லை என்றால் இந்த வெற்றி தோல்வியாக மாற முடியும். அவ்வாறு பொருளாதார நெருக்கடியைக் கையாளாமல் இனப் பிரச்சனை தீர்வைக் குறித்தோ, அதற்காக யாப்பை மாற்றுவது குறித்தோ என்பிபி அரசாங்கம் சிந்திக்குமா?

பொருளாதார நெருக்கடி ஓரளவுக்கு தணிந்தாலும் இப்போதிருக்கும் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கடைசிப் பகுதியில் தான் அவர்கள் அவ்வாறு சிந்திக்கலாம். அதாவது பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குத் தணித்த பின் தான் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி யோசிக்கலாம் என்ற நிலைமை உண்டு. இலங்கையைப் போலவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட கிரீசில் நிலைமை முன்னேறி வருவதாக அண்மைய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கிரீஸ், தனது கடன் பொறுப்புகளை நிறைவேற்ற முடியவில்லை என்று 2010ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதனால் அது வங்குரோத்தாகிய நாடாக அறிவிக்கப்பட்டது. கிரீஸ் தனது அரசுக் கடனை திருப்பி செலுத்த முடியாமல் போனதால், ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஐரோப்பிய மத்திய வங்கி (ECB), சர்வதேச நாணய நிதிய (IMF) ஆகியவற்றால் மீட்புத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

கிரீஸ் தனது பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. 2023ஆம் ஆண்டு 40வீத வளர்ச்சியுடன், 2024 இல் Athens General Stocks Index (ATG) 13.1% உயர்ந்துள்ளது. கிரீஸின் பொருளாதாரம், 2025 இல் 2.3வீத வளர்ச்சியை எட்டுமென ஐரோப்பியக் கமிஷன் கணித்திருக்கின்றது.

ஆனால் கிரேக்கத்தின் கதையும் இலங்கைத் தீவின் கதையும் ஒன்றல்ல. இலங்கைத் தீவின் பொருளாதார நெருக்கடி என்பது அரசியல் காரணங்களால் ஏற்பட்டது. ஜேவிபி கூறுவது போல, அல்லது ஏனைய தென்னிலங்கைக் கட்சிகள் கூறுவது போல, அரச மயப்பட்ட ஊழல், அரச மயப்பட்ட மோசடி போன்றவற்றின் காரணமாக ஏற்பட்ட ஒன்று அல்ல.அது இனப்பிரச்சினையின் விளைவு. தென்னிலங்கை கட்சிகள் எவையும் அதனை இன்று வரை ஏற்றுக் கொள்ளவில்லை.

கட்சிகள் மட்டுமல்ல, சிங்கள அறிவு ஜீவிகளே அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதார நெருக்கடியை முழுமையாகத் தீர்க்க முடியாது. உடனடிக்கு பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளில் இருந்து நாட்டை காப்பாற்றலாமே தவிர பொருளாதார நெருக்கடியை முழுமையாகத் தீர்ப்பது என்றால், இலங்கைத் தீவின் இன ஐக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இன ஐக்கியத்தைப் பாதுகாப்பது என்று சொன்னால் இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் இறைமையும் சுய நிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசம், தேசிய இனம் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இனப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணத்தை ஏற்றுக் கொண்டு அதைத் தீர்ப்பதற்கான அடிப்படை கட்டமைப்புசார் மாற்றங்களை செய்தால்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம். இனப்பிரச்சினையைத் தீர்த்தால்தான் பொருளாதார நெருக்கடியை முழுமையாகத் தீர்க்கலாம்.

ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க வேண்டும் என்று என்பிபி அரசாங்கம் சிந்திக்கின்றது.

அனுர மட்டுமல்ல சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பும் அப்படித்தான் சிந்திக்கின்றது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அப்படித் தான் சிந்திக்கும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முயல்வது என்பது வலி நிவாரணி அரசியல்தான்.(22ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. ”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 ஜனவரி 2025- 10 ஜனவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஹ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஹ்ரீபதி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் திதி 14 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி ஞானாம்பிகை ஹ்ரீபதி அவர்ககளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 11 ஜனவரி 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஒன்பதாவது ஆன்டு நினைவு நாள் 28 டிசம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆறாவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலிகள்



### திரு கந்தையா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா வைத்தியநாதன் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 12 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கந்தையா வைத்தியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது நான்காவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2025 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவபாலன் லலிதகுமாரி செல்வி சந்தியா சிவபாலன் ஆகியோர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



05 ஜனவரி 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதங்கி செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மாதங்கி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



10 ஜனவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணலிங்கம் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினித்தின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் வினித் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவுவழங்கி மகிழ்ந்தார்.


Celebrating 32 years of excellence, Eelanadu, a Tamil community newspaper in Canada

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா



Kalaimamni, Dr. Nithyasree Mahadevan presents

Sangeetha Sangamam 2025 - Carnatic Musical Concert

கலைமாமணி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் வழங்கும்

சங்கீத சங்கமம் 2025



சிறப்புரை

வேர்களைத் தேடுங்கள்

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்

Sunday, March 23, 2025 @ 5:30pm

The Armenian Community Centre
50 Hallcrown Place, Toronto, ON

தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

# யாழ்ப்பாண ஆலயங்கள் வழக்குகளுக்கு அதிகம் செலவு செய்கின்றது என்கிறார் வடக்கு ஆளுநர்



ஆலயங்கள் இப்போது சமூகசேவைக்கு செலவு செய்வதிலும் பார்க்க வழக்குகளுக்கே அதிகளவு பணத்தைச் செலவு செய்கின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா 07 ஜனவரி 2025செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மல்லாகத்திலிருந்து அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலை வந்தடைந்தது. ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபராக இருந்தமையை நினைவுகூர்ந்து அன்றைய நாட்களில் அம்மையாருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

போர் மற்றும் இடப்பெயர்வுகளின் போதும் அம்மையார் சமூகப் பணிகளை திறம்பட முன்னெடுத்திருந்தார்.

அன்றைய காலத்தில் ஆலயங்கள் சமூகப் பணிகளை முன்னெடுக்காதிருந்த சூழலில், அம்மையார் அவர்களே அதனைத் தொடக்கி அதன் முன்னோடியாக இருந்ததார் இன்று ஆலயங்களில் உண்மையான கடவுள் பக்தி இல்லை. இதனால் பல ஆலயங்கள் நீதிமன்றப்படியேறியுள்ளன. புலம்பெயர் தேசங்களிலிருந்து ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டாலும் ஆலய நிர்வாகங்கள் ஒழுங்காக கணக்கறிக்கைகள் முன் வைப்பதில்லை. இது பிரச்சினைகளுக்கு அடிநாதமாக இருக்கின்றது.

தனது காலத்தின் பின்னரும் இந்த அறப்பணிகள் தொடர்ந்தும் தடையுறாது முன்னெடுத்துச் செல்வதற்கு பொருத்தமான ஒருவரான கலாநிதி ஆறுதிருமுருகனை அம்மையார் வளர்த்து அடையாளம் காட்டியுள்ளார். அவரின் சேவைகளைப் பாராட்டுகிறேன்.

காய்க்கின்ற மரம் கல்லெறி படுவதைப் போல அவர் மீதும் பலர் விமர்சனங்களையும் குறைகளையும் முன்வைக்கின்றனரே தவிர அவர் செய்யும் சேவைகளைப் பாராட்ட முன் வருவதில்லை.

எமது சமூகத்தில் இந்த விடயம் இப்போது ஆழமாக வேரூன்றிவிட்டது. ஆறுதிருமுருகன் மீதான நம்பிக்கையிலேயே புலம்பெயர் தேசத்திலிருப்பவர்களும் இங்கிருப்பவர்களும் அவர் ஊடாக உதவிகளைச் செய்ய முன்வருகின்றனர்.

இந்தச் சமூகப் பணிகள் எமது மக்களுக்கு மிக அவசியமானவை. இதை அவர் தொடரவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும், இந்து மதக் குருக்கள், மக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.



# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06
03
1940

மறைவு
13
01
2020

## காலஞ்சென்ற அமரர் சி.வி.விவேகானந்தன்

(C.V. Vivekananthan)

**சிரேஷ்ட சட்டத்தரணி**

**யாழ். மிருசுவில் விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி நுணாவில் கிழக்கை வதிவிடமாகவும், கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த காலம் சென்ற அமரர் சி.வி.விவேகானந்தன் (சிரேஷ்ட சட்டத்தரணி) அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி. உங்கள் வாழ்வின் ஆளுமையை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறோம்.**

"பப்பா,"
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஐந்து ஆண்டுகள் கடந்த போதும்,
உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் ஆழமாகப் பதிந்துபோயிருக்கின்றது.
நேர்மைமிகும் உங்களின் வாழ்க்கைப் பயணம் எங்களுக்கு இன்றும், என்றும் வழிகாட்டுதலாக விளங்குகின்றது.
குடும்பத்திற்கும், சட்டத்துறைக்கும், சமூகத்திற்கும் நீங்கள் அளித்த பங்களிப்புகள் என்றும் மறக்கமுடியாதவை.
சட்டத்துறை உங்கள் உயிர் மூச்சு. அரைநூற்றாண்டு காலம் உங்கள் துறையில் நீங்கள் சாதித்தவை
ஒரு போற்றதக்க வரலாறு.

இனக்கலவரம், உள்நாட்டுப் போர் போன்ற பாரிய தாக்கங்கள் எங்களை உலுக்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்
சூழ்நிலைகளின் தாக்கம் எங்களை பாதிக்காதவாறு எங்களை வழி நடத்தியவர் நீங்கள்.
உங்களின் வழிகாட்டும் திறன், வார்த்தைகள், ஆதரவு, தேவைகள் அறிந்து உதவிகள் செய்யும் பண்பு,
உறவுகளை உபசரித்த முறைகள் உங்களின் வாழ்வியலிருந்து
எங்களுக்கு கிடைத்து நாம் பின் பற்றும் அரிய பண்புகள்.

**உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதில் இருந்து நீங்காது.**
**உங்கள் நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# Buying Home / Selling / Investing

## Knowledge . Experience . Dedication



இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மற்றும்

தை பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் ஆதரவுக்கு நன்றி!

HOMELIFE HIGHER STANDARDS

**Indra** Michael Xavier

Sales Representative

**647 995 6829**

*indra.m.xavier@gmail.com*

**HomeLife/ Future**

Realty Inc., Brokerage*

205-7 Eastvale Dr. Markham ON, L3S 4N8

**Office: 905-201-9977** Fax: 905 201 9229

*Independenlty Owned and Operated



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 2025:- தமிழ்மக்களின் ஆண்டுப் பலன்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ்ப் புத்திஜீவிகளில் சிலர் தமிழ்க் கிராம மட்டத்தில் விவசாய அமைப்புகளைச் சந்தித்து விவசாயி களின் குறைகளைக் கேட்டு வரு கிறார்கள். இன்னொரு பக்கம் கடற் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிரு க்கும் சந்திரசேகரன் தமிழ்ப் பகுதிகளில் கடல் தொழிலாளர் சங்கங்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் பிடியைப் பலப் படுத்தி வருகிறார்.

கடந்த மாத இறுதிப்பகுதியில் யாழ்ப் பாணத்தில், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான மற்றொரு குடிமக்கள் அமைப்பு அறிமுகம் செய்து வைக்கப் பட்டது. மறுமலர்ச்சிக்கான மக்கள் இயக்கம்'' என்று அழைக்கப்பட்ட அந்த அமைப்பை மாற்றத்துக்கான மக்கள் அமைப்பு என்று சம்பந்தப் பட்டவர்கள் அழைக்கிறார்கள். அது யாழ் ஊடக அமையத்தில் ஒர் ஊடகச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டை இப்பொழுது ஆளும் தேசிய மக்கள் சக்தி என்பது ஜேவிபியும் உட் பட 21 அமைப்புகள் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு ஆகும். இக்கட்டமைப்புக்குள் தொழிற்சங்கங்கள், இடது சாய்வுடைய அமைப்புக்கள், துறைசார் தொழிற்சங்கங்கள், பல்கலை க்கழக ஆசிரியர் அமைப்புகள்,மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள், என்றிவ்வாறாக சமூகத்தின் பல்வேறு துறைகளை அல்லது பல்வேறு பிரிவி னரை பிரதிநிதித்துவப்படுத்தும் அமை ப்புக்கல் உண்டு.

இதில் இடது மரபில் வராதவர்களையும் உள்ளீர்க்கத் தேவையான விரிவு, நெகிழ் ச்சி ஜேவிபியிடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பிரதமர் ஹரிணி ஜேவிபி உறுப்பினர் அல்ல. வளமான குடும்ப பின்னணியை கொண்டவர். அவரைப் போன்றவர்களையும் உள்ளீர்க்கத்தக்க விரிவு ஜேவிபியிடம் ஏற்பட்டிருக்கிறது.

ஜேவிபியானது சீனச்சார்பு கொமியுனி ஸ்ட் கட்சியிலிருந்து விலகி வந்தவர் களால் உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம். அதனால் அந்த அமைப்பிடம் இடது சாரி இயக்கங்களிடம் காணப்படும் பெரும்பாலான ஒழுக்கங்கள் உண்டு. அது இப்பொழுது நடைமுறையில் ஒரு கொமியுனிஸ்ட் அமைப்பாக இல்லைசீனக் கொமியூனிஸ்ற் கட்சி யைப் போலவே அதுவும் பெரு மளவுக்கு தேசியவாதப் பண்புமிக்க ஒரு கட்சிதான்.

ஆனால் கொம்யூனிஸ்டுகளிடம் காணப் படும் அமைப்பாக்க ஒழுக்கம் அவர்களி டம் உண்டு. அதைவிட முக்கியமாக தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த அனுபவம் ஜேவிபிக்கு உண்டு. இரண்டு தடவைகள் நசுக்கப் பட்ட அமைப்பு இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அத்தனை அழிவுகளில் இருந்தும் மீண்டெழுந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் அந்த அமைப்பு க்குண்டு. அதை விட மேலதிகமாக இப்பொழுது கடந்த ஆண்டு பெற்ற இரண்டு தேர்தல் வெற்றிகளும் அவர் களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடு த்திருக்கின்றன.அதிலும் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் கிடைத்த வெற்றி களால் அவர்கள் அதிகம் உற்சாகமடை ந்திருக்கிறார்கள். எனவே தென்னிலங்கை யில் இருப்பது போன்ற கட்டமைப்பு களை, வலைப்பின்னலை தமிழ்ப் பகுதி களிலும் பரவலாக்க முயற்சிப்பார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் என்பிபி யால் நிறுத்தப்பட்டு ஆசனங்களை வென்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஜேவிபியின் கொள்கை வழி வந்தவர் களோ அல்லது புரட்சிகரமான உள்ளட க்கங்களைக் கொண்டவர்களோ அல்ல. அவர்கள் தமிழ் மக்களுடைய போரா ட்டங்களிலும் காணப்பட்டதில்லை. கொழும்பில் ஜேவிபி நடத்திய ஆபத்து க்கள் மிகுந்த போராட்டங்களிலும் காணப்பட்டதில்லை. இந்த விடயத்தில் வடக்கு கிழக்கில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது எண்பிபி,ஏனைய தென் இலங்கை மையக் கட்சிகளைப் போலத் தான் செயற்பட்டிருக்கிறது. இதில் திருக்கோணமலையிலிருந்து தெரிவு செய்யப்பட்டவரும்,பதில் வெளி விவகார அமைச்சராக இருப்பவரு மாகிய அருண் ஹேமச்சந்திர ஓரளவு க்கு விதிவிலக்கு எனலாம்.

எனவே நாடாளுமன்றத் தேர்தலில் தன் வேட்பாளர்களைத் தெரிவதில் இருந்த பலவீனங்களை அடுத்தடுத்த தேர்தல் களில் இல்லாமல் செய்வதற்கு என்பிபி முயற்சிக்கும். குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்தில் என்பிபிக்குச் சார்பான புத்தி ஜீவிகளின் அணி துடிப்பாகச் செயல்படு கின்றது. ஆனால் தமிழ் மாணவர்கள்



மத்தியில் என்பிபிக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய பலமான கட்டமைப்பு கிடையாது.

2009க்குப்பின் ஒரு மூத்த ஜேவிபி உறுப்பினர் எனக்குச் சொன்னார், இலங்கைத் தீவிலேயே அதிகம் போராட வேண்டிய ஒரு பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழகம்தான்.ஆனால் போராட முடியாமல் இருப்பதும் அதே பல்கலை க்கழகந் தான் என்று. அவர் சொன்னது முழுவதும் சரியல்ல. 2009க்குப் பின் வந்த ஆண்டுகளில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் துணிச்சலாகப் போராடியிருக்கிறார்கள். ஆனாலும் கடந்த சில ஆண்டுகளாக ஒரு சோர்வு காணப்படுகிறது.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத் திய தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்புக்குள் பல்கலைக்கழக மாணவ அமைப்புகள் காணப்பட்டன. ஆனால் பொது வேட்பாளருக்கு ஆதர வாக பகிரங்கமாக களமிறங்கி செயல்படு வதற்கு மாணவர் அமைப்பு தயங்கியது. ஆங்காங்கே உதிரிகளாக அல்லது சிறு குழுக்களாக அவர்கள் பங்களித்திருக்க லாம். ஆனால் பொங்கு தமிழ் அல்லது எழுக தமிழ் மக்களுக்காக உழைத்தது போல பொது வேட்பாளருக்காக பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சமூகமாகச் உழைக்கவில்லை. நாங்கள் பொதுச் சபையை ஏற்றுக்கொள்கிறோம் ஆனால் பொது வேட்பாளரை ஏற்க வில்லை என்ற ஒருவித நழுவலான நிலைப்பாடு அங்கே காணப்பட்டது.

பொது வேட்பாளரை முன்னிறுத்திய கட்சிகளோடு இணைந்து செயல்படுவ தற்கு அவர்களுக்குத் தயக்கம் இருந் திருக்கலாம். அல்லது ஒரு தேர்தல் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடுவதற் கும் அவர்கள் தயங்கியிருக்கலாம். ஆனால் யாழ்.பல்கலைக்கழகமோ கிழ க்கு பல்கலைக்கழகமோ பொது வேட்பாளருக்கு ஆதரவாக மக்களைத் திரட்டும் பணியில் ஒரு மாணவ சமூக மாகத் தீவிரமாக எழுச்சிகரமாகச் செயல் படவில்லை. அப்படித்தான் யாழ்.பல் கலைக்கழக ஆசிரியர்கள் சங்கமும் புலமைசாரா ஊழியர் சங்கமும் பொது வேட்பாளருக்காக ஒரு சமூகமாக இறங்கிச் செயற்படவில்லை.

முன்பு ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் ஊழியர் சங்கமும் ஒப்பீட்டளவில் உற்சாகமாக இறங்கி வேலை செய்தன. ஆனால் பொது வேட் பாளருக்காக அவ்வாறு உழைக்க வில்லை. புலமைசாரா ஊழியர் சங்கம் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக நின்றது. விரிவுரையாளர் களைப் பொறுத்தவரை அரசறிவியல் துறையின் தலைவராகிய பேராசிரியர். கணேசலிங்கம் தமிழ் மக்கள் பொதுச் சபையில் ஒரு அங்கம் வகித்தார். பொதுக் கட்டமைப்புக்குள்ளும் இருந் தார். அவரைத் தவிர வேறு சில விரிவுரையாளர்கள் பொது வேட்பாளரு க்கு ஆதரவாக உதிரிகளாகக் காணப் பட்டார்கள். ஆனால் ஒரு அறிவாளிகள் சமூகமாக அவர்கள் திரண்டு பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. ஒப்பீட்டளவில் பொது வேட்பாளருக்கு ஆதரவான விரிவுரையாளர்கள்தான் அதிகம்.ஆனால் அவர்கள் அமைப்பாக்க ப்படவில்லை.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில புத்திஜீவிகள் என்பிபிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து ஊடக சந்தி ப்பை நடத்தினார்கள். எனினும் அதில் அவர்கள் திட்டவட்டமாக தெளிவாக என்பிபியை ஆதரிக்குமாறு கூறுவதற் குத் தயங்கினார்கள். ஆனால் அந்த தயக்கம் தேர்தல் வெற்றிகள் பின் இப் பொழுது மறைந்து விட்டது. அவர்கள் தயங்கித் தயங்கி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்களுக்கு வழி காட்டிய போது அவர்களுக்கு எதிராக கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டு பல் கலைக்கழகத்தில் ஒட்டப்பட்டன. அவர் களைக் கருத்து ரீதியாக வென்றெடுப்ப தற்கோ அல்லது தமிழ்த் தேசிய நிலைப் பாட்டைக் கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்களை ஒரு அமைப்பாகத் திரட்டுவதற்கோ முயற்சி எடுக்கப்பட வில்லை. மாணவ அமைப்புகளும் அந்த விடயத்தில் திடகாத்திரமாகச் செயற்பட வில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு தயங்கி தயங்கி தமது நிலைப்பாட்டை வெளிப் படுத்திய என்பிபிக்கு ஆதரவான புத்தி ஜீவிகள் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் துணிச்சலாக முன்வந்து தமது அரசி யல் சாய்வை வெளிப்படுத்தினார்கள். தமிழ்த் தேசியவாத அரசியலை மலட்டு அரசியல் என்றும் அழைத்தார்கள்.

இது யாழ்.பல்கலைக்கழகத்தின் இப்போ துள்ள அரசியல் சூழலைக் காட்டுகின் றது. தமிழ் பகுதிகளில் உள்ள ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் நிலைமை இது வென்றால், ஏனைய துறைசார்ந்த கட்ட மைப்புகளைக் குறித்துச் சிந்திக்கத் தேவையில்லை. அதைவிட மோசமான ஒரு விடயம், தமிழ்த்தேசியக் கட்சி களிடம் பொருத்தமான மக்கள் கட்ட மைப்புகள் அநேகமாக இல்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தேசியவாத அரசியல் என்றால் என்னவென்று தெரிய வில்லை. தேசியவாத அரசியல் என்பது மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டி க்கட்டுவது. எப்படிக் கூட்டிக் கட்டு வது? அவர்களை அரசியல் மயப்படுத்த வேண்டும்அல்லது குறைந்தது இனமான உணர்வின் அடிப்படையிலா வது திரட்டவேண்டும் அமைப்பாக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க் கட்சிகளிடம் அவ்வாறான கட்டமைப்பு கள் உண்டு?

ஆனால் இந்த வெற்றிடத்தை என்பிபி விளங்கி வைத்திருக்கின்றது.கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்னில ங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவ அமைப்புகளோடு தொடர்பு டைய தமிழ்ப் பல்கலைக்கழக மாண வர்கள் என்பிபிக்கு ஆதரவாகத் தமிழ்க் கிராமங்கள் சிலவற்றில் வேலை செய்தி ருக்கிறார்கள். எனவே இப்பொழுது தேர்தல் வெற்றிகள் தந்த உற்சாகத்தோடு அரச பலத்தோடு என்பிபி தமிழ்ப் பகுதி களில் தனது கட்டமைப்புகளை ஆழ மாகப் பலப்படுத்தி விரிவுபடுத்தி வரு கிறது.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகம் தெரிகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பெரும்பாலும் முதலில் நடத்தக்கூடும். காசு வேண்டும். ஆனா லும் கடந்த ஆண்டு கிடைத்த தேர்தல் வெற்றிகளை அடுத்தடுத்த கட்டத்து க்குப் பலப்படுத்துவது என்றால் தேர்தல் களை வைக்க வேண்டும்.

குறிப்பாக இந்தியாவைச் சமாதானப்படு த்த மாகாணசபைத் தேர்தலை வைக்க வேண்டியிருக்கும். எனவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகளே அதிகம். இப்படிப்பட்டதொரு பின்னணியில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுக்கு வழங்கிய தீர்ப்பி லிருந்து கற்றுக்கொண்டு, என்பிபியை யும் அர்ஜுனாக்களையும் எதிர்கொள்வ தற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாரா? அல்லது, சிவப்பு மஞ்சள் கொடியைக் காட்டினால் தமிழ்த் தேசிய வாக்குகள் கொத்தாக வந்து விழும் என்று கற்பனையில் மூழ்கியிருக்கிறார் களா?

தமிழ் மக்களை அமைப்பாக்கவில்லை யென்றால் அர்ஜுனாக்கள் மேலும் பெரு குவார்கள். தமிழ் மக்களின் சின்னச்சின்ன பிரச்சனைகளை, சின்னச் சின்னக் கவலைகளை குறைகளைக் கேட்பதற் கும் (17ம் பக்கம் பார்க்க)

# ஒப்புக் கொள்ளும் உண்மைகள்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் மறைவு தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இரங்கல் குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலகட்டத்தில், இலங்கை தமிழர் விவகாரத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கினார் என்றும், 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடனான கூட்டறிக்கையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிலிருந்து கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு முறை ஒன்று ஏற்படுத்தப்படும் என்ற வாக்குறுதியை பெற்றிருந்தார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலகட்டத்தில் தான் இறுதிக் கட்டப் போர் இடம் பெற்றது. தமிழர்களுக்குப் பேரழிவை ஏற்படுத்திய அந்தப் போரை நிறுத்துவதற்கு அவர் எந்த வகையிலும் உதவி வழங்கியிருக்கவில்லை. போரை முன்னெடுத்து செல்வதற்கு இலங்கை அரசுக்கு ஏற்பட்ட தடைகளை தடுத்து நிறுத்துவதிலேயே அவர் கவனம் செலுத்தி இருந்தார்.

போர்நிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அமெரிக்க தூதுவர் ரொபேர்ட் ஓ பிளாக், பிரித்தானியாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் போன்றவர்களைத் தடுத்து நிறுத்தியது இந்தியா தான்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான, எல்லா வியூகங்களும் முன்னெடுக்கப்பட்டு விட்ட நிலையில் அதில் தலையீடு செய்ய வேண்டாம் என புதுடெல்லியில் வைத்து மேற்குலக இராஜதந்திரிகள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

அந்தக் காலகட்டத்தில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போதும், அவரால் போரை நிறுத்துவதற்கான எந்த பங்களிப்பையும் செய்யக் கூடியதாக இருக்கவில்லை.

ஏனென்றால் போர் நிகழ்த்தப்பட்டதே, இந்தியாவின் நிகழ்ச்சி நிழலின் அடிப்படையில் தான். இது ஏற்கெனவே தெளிவாகத் தெரிந்த ஒரு விடயம்.

அண்மையில் இதனை உறுதிப்படுத்தும் வகையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர், இந்தியாவுக்கு இரண்டாவது முறையாக பயணம் மேற்கொண்டிருந்த போது தான், முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் மரணம் நிகழ்ந்தது. அவர் நேரில் சென்று மன்மோகன் சிங் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அதேவேளை, புதுடெல்லியில் இடம்பெற்ற, இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் நினைவு நிகழ்விலும் ரணில் விக்கிரமசிங்க நினைவுப் பேருரை நிகழ்த்தியிருந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் அவர், தான் இரண்டாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்ற போது – விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் செய்வதை தவிர வேறு வழி இருக்கவில்லை எனக் கூறியிருக்கிறார்.

2001ஆம் ஆண்டு அவர் இரண்டாவது முறையாக பிரதமர் பதவிக்கு வந்திருந்தார். அப்போது வடக்கு போர்முனையில் இலங்கை அரசாங்கம் பல பின்னடைவுகளை சந்தித்திருந்தது.

சந்திரிகா அரசாங்கத்தின் போர் மூலோபாயங்கள் விடுதலைப் புலிகளால் தொடர் தாக்குதல்களின் மூலம் தோற்கடிக்கப்பட்டிருந்தன. ஆனையிறவு உள்ளிட்ட முக்கியமான படைத்தளங்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டிருந்தன. பெருமளவான படையினர் கொல்லப்பட்டு, அவர்களின் ஆயுதங்களும் தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் அள்ளி எடுக்கப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட வடக்கு




போர்முனையில் போரை நிகழ்த்த முடியாதளவுக்கு ஒரு இறுக்க நிலை உருவாகி இருந்தது.

பொருளாதாரம் வேறு முடங்கிப் போயிருந்தது. கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் அரசாங்கத்துக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கப்பல்கள் கூடுதல் காப்புறுதியை செலுத்த வேண்டிய இருந்ததால், வேறு துறைமுகங்களை நாடத் தொடங்கியிருந்தன.

பொருளாதார ரீதியாக இலங்கை அரசாங்கம் நெருக்கடியில் சிக்கி இருந்த அந்த சூழலில், விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் ஒன்றுக்கு செல்வதை தவிர, ரணில் விக்கிரமசிங்கவிற்கு வேறு வழி இருக்கவில்லை. இதனை அவர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்தச் சூழலில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு நோர்வேயின் நடுநிலை ஏற்பாட்டில் முயற்சிகள் தொடங்கப்பட்டிருந்தன.

அந்த முயற்சிகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு போர் நிறுத்த உடன்பாட்டை செய்து கொள்வதற்கு, இந்தியாவிடம் ஆதரவு தேடிச் சென்றிருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்தவர் பாரதிய ஜனதா கட்சியின் அடல் பிஹாரி வாஜ்பாய்.

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்து கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவை வழங்குவதற்கு பிரதமர் வாஜ்பாய் உடனடியாக முன்வரவில்லை.

பதிலாக, இந்த விடயத்தில் சோனியா காந்தியை சந்தித்து அவரது ஆதரவை பெற்று வருமாறு அனுப்பி வைத்திருக்கிறார்.

சோனியாகாந்தி அதற்கு பச்சைக்கொடி காட்டிய பின்னர் தான், இந்திய பிரதமர் வாஜ்பாய் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியாவின் ஆதரவை வழங்கியிருக்கிறார்.

இவை எல்லாவற்றையும் ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லி கூட்டத்தில் பகிரங்கமாக கூறியிருக்கிறார்.

ஒரு பக்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் விடுதலைப் புலிகளுக்கு குழி பறிக்கின்ற வேலை தொடங்கப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவும் அடல் பிஹாரி வாஜ்பாயும் இணைந்து நடத்திய பேச்சுக்களின் முடிவில், இரண்டு தரப்புக்களும் கடலில் அரசு சாராத தரப்பினரை அனுமதிப்பதில்லை என்று தீர்மானம் எடுக்கப்படுகிறது. இங்கு அரசு சாராத தரப்பினர் எனக் குறிப்பிட்டது, கடற்புலிகளைத் தான். அந்த தீர்மானம் எடுக்கப்பட்டதற்கான காரணத்தையும் ரணில் விக்கிரமசிங்கவே கூறியிருக்கிறார்.

அந்த காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் முதுகெலும்பாக இருந்தது கடற்புலிகள் தான். வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை கொண்டு வந்து போரை நடத்துவதற்கு கடற்புலிகள் பெரும் பங்காற்றி இருந்தார்கள்.

அதைவிட கடலில் இலங்கை கடற்படையின் நகர்வுகளையும் நடமாட்டங்களையும் மட்டுப்படுத்தி அவ்வப்போது தாக்குதல்களையும் நடத்தி வந்தார்கள்.

விடுதலைப் புலிகளை வழிக்கு கொண்டு வர வேண்டுமானால் கடற்புலிகளை செயலற்ற தாக்க வேண்டும் என இரண்டு நாடுகளும் தீர்மானிக்கின்றன. அந்த அடிப்படையில் தான் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடற்புலிகளை செயலிழக்க செய்வதற்கான முயற்சி என்பது தனித்து இலங்கை அரசாங்கத்தினதோ, கடற்படையினருடையதோ அல்ல. அதில் இந்தியாவின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது.

அப்போது தொடக்கம் இந்தியாவின் உதவிகள், ஒத்துழைப்புகள் போர்



முடிகின்ற வரை நீடித்தன என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

அது மட்டுமின்றி சமாதான பேச்சுவார்த்தையில் தன்னால் வெற்றி பெற முடியாது என்பது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குத் தெரியும் என்றும், அதனால் அமைதி பேச்சுவார்த்தையை புறக்கணிக்க தொடங்கினார் என்றும் ஒரு கருத்தை ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் வெற்றி பெற முடியாது என்பது பிரபாகரனுக்குத் தெரியும் என்றால், பேச்சுவார்த்தைமூலம் இலங்கை அரசாங்கம் தீர்வு ஒன்றை வழங்கப் போவதில்லை, அதற்கான வாய்ப்பு இல்லை என்பது அவருக்கு தெரிந்திருக்கிறது என்று தான் அர்த்தம். அந்த இடத்தில், ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு ஒன்றை வழங்குவதற்கு நான் தயாராக இருந்தேன் அதனை ஏற்றுக் கொள்வதற்கு பிரபாகரன் தயாராக இருக்கவில்லை என்று கூறவில்லை.

சமாதான பேச்சுவார்த்தையில் வெற்றி பெற முடியாது என்பது பிரபாகரனுக்குத் தெரியும் என்று தான் கூறியிருக்கிறார். பேச்சுவார்த்தையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நீதியாக நியாயமாக நடந்து கொண்டிருந்தால், பிரபாகரன் அப்படி உணர வேண்டிய நிலை வந்திருக்காது. ஆனால், பிரபாகரன் நம்பிக்கையீனத்தை உணரக் கூடிய ஒரு நிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இருக்கிறது, என்பதை ரணில் விக்கிரமசிங்க இப்போது ஒப்புக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்.

பேச்சுவார்த்தை ஏமாற்றுத்தனமாக முன்னெடுக்கப்பட்டது என்பதை ரணில் இதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார். அந்த சந்தர்ப்பத்தில் இந்தியா நடந்து கொண்ட முறை தமிழர் தரப்பில் பெரிய அழிவுகளை ஏற்படுத்தியது.

போர்நிறுத்தம் செய்வதற்கு இந்தியாவின் உதவியை வழங்குவதற்கு கூட, சோனியா காந்தியின் அனுமதியை பெறுகின்ற அளவுக்கு, அப்போதைய இந்திய அதிகாரவர்க்கம் தமிழருக்கு எதிரான ஒரு நிகழ்ச்சி நிரலை கொண்டிருந்தது.

அதற்கு ராஜீவ்காந்தி கொலையே காரணம் என்பதை புரிந்து கொள்வது கடினமானதல்ல. அந்தக் காழ்ப்புணர்வின் வெளிப்பாடாகத் தான், 2009 ஆம் ஆண்டு போரை முடித்து வைப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்பட்டன.

இந்தியா தனக்கு சார்பான சூழலை உருவாக்கிக் கொண்டு, இலங்கை அரசாங்கத்தை கொண்டு போரை முன்னெடுத்தது. அதற்கு குறுக்கே யார் வந்த போதும் தடுத்து நிறுத்தியது.

மன்மோகன் சிங் பொருளாதார மேதையாக இருக்கலாம். ஆனால், அந்தக் கட்டத்தில் சோனியா காந்தியின் பேச்சுக்கு ஆடும் பொம்மையாகவே அவர் இருந்தார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதத்தை மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக் கொண்டதாக, சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த வாக்குறுதியை, இலங்கை அரசாங்கம் இன்று வரை நிறைவேற்றவும் இல்லை. இந்திய அரசாங்கம் அதனை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுக்கவும் இல்லை.

தமிழர்களுக்கு பயன் கொடுக்காத இந்த வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டதை, எப்படி மன்மோகன் சிங்கின் சாதனை என்று கூறிக் கொள்ள முடியும்?

# இருந்தாலும் அவர்கள் முயன்றார்கள்

சிதறிப் போயுள்ள சிவில் சமூகம் ஏனைய தமிழ்த் தரப்புக்களை எப்படிக் கூட்டிக்கட்டும்? நடந்து முடிந்த சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில் தமிழ் அரசியற் கட்சிகளை மாத்திரம் பார்த்துப் பரிகாசம் செய்வதில் பயனில்லை. தமிழ் சிவில் சமூகத்திற்கும் அதில் பெரும் பங்கு உண்டு.

தமிழ் அரசியல் கட்சிளைக் கை காட்டி குற்றஞ் சாட்டுவதற்கு முன் தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புக்களின் கருத்தியல் மற்றும் கட்டமைப்புப் பலத்தை கேள்விக்குள்ளாக்கிய ஆண்டாக கடந்து போயுள்ளது 2024. சிவில் சமூகத்தை கூட்டிக் கட்டுவதிலும் அவர்களை அமைப்பாக்குவதிலும் செயல் முனைவோரிடையேயுள்ள வெற்றிடத்தால் முன் தள்ளப்பட்டவர்கள் தான் பத்தியாளர்கள்.

எமது சமூகத்தின் பொதுப் புத்தியில் உறைந்த பிரம்மை பத்தியாளர்களுக்கு புத்திஜீவிகள் எனும் தோற்றப் பொலிவை அளித்தது. செயல் வாதம் என்பது அவர்களிடம் கிடையாது. மக்களிடையே புதிய முற்போக்குக் கருத்துக்களை உருவாக்க கருத்தியல் பின்னணி கிடையாது. மக்களிடம் கருத்துக்களைக் கொண்டு சேர்க்க செயற்பாட்டுக் கட்டமைப்புக் கிடையாது. அவற்றை உள்வாங்குவதற்கான சித்தமும் கிடையாது! யாரேனும் மேடையமைத்துக் கொடுத்தால் பேசுவார்கள் இல்லையேல் எழுதுவார்கள். அவை தான் அவர்களால் அதிகபட்சம் இயலுமானதொன்று!

சமூகப் பரப்பில் ஆங்காங்கே பேசப்படுபவற்றை எழுதுங்கள் என்று யாரும் கேட்பவற்றை ரசனை கொண்ட வார்த்தைகளால் கோர்த்து படிக்க கேட்க நமக்குத் தருவார்கள். அதன் சாரத்தில் போய்த் தேடினால் அதனை வழிநடத்துவது தத்துவமாக இருக்காது வெறும் ஊறிப் போன சொந்தக் கருத்துக்களின் விமர்சனங்களாகவே இருக்கும்.

தமது சக்திக்கு அப்பால் தமிழ்ப் பொது வேட்பாளருக்காக பத்தியாளர்கள் முன்னின்றனர். வேட்பாளரை நிறுத்துவதிலும் அவர்கள் வெற்றியும் கண்டனர். ஆனால் அவர்களால் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதில்த் தான் இயலாமற் போனது. அவர்களிடம் இரண்டு விடயங்களில் இயலாமை காணப்பட்டது ஒன்று கருத்தியல் மற்றொன்று செயற்பாட்டுக் கட்டமைப்பும் சமூகப் பயிற்சியும். சிவில் சமூக அமைப்புக்களையே கூட்டிக் கட்ட முடியாதவர்கள் தமிழ் மக்களை திரட்ட முயன்றார்கள்! இருந்தாலும் அவர்கள் முயன்றார்கள்!

தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழ் மக்கள் பொதுச் சபை எனும் பெயரில் சிவில் அமைப்புக்களை ஒன்றாக்கினார்கள். அதில் யாழ் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்புக்களும் இடம் பெற்றிருந்தன. அவை தமிழ்ப் பொது வேட்பாளர் எண்ணக் கருவினை முழுமையாக ஆதரித்தன. இருப்பினும் கட்சிகளை உள்ளடக்கிய கட்டமைப்பு நிறுத்திய பொது வேட்பாளரை முழுமையாக ஆதரிப்பதில் அதிகம் சிந்தித்தன.

பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்புக்கள் நிறுத்தப்பட்ட பொது வேட்பாளரிற்கு இறுதி நேரத்தில் தார்மீக ஆதரவினை மட்டுமே அளித்தனர். எதற்கும் தயங்கியிராத பல்கலைக் கழக சமூகத்தினர் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னணியில் நிற்காததற்கு காரணங்கள் இல்லாமலில்லை.

முதன்மையானது தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய உடன் நின்ற தரப்புக்களின் கடந்த காலங்களும் நிகழ்காலங்களுமே! அவர்கள் கடந்த காலங்களில 'வெளிநாட்டு அரசின் வழிநடத்தல்களுடன் அல்லது ஆசீர்வாதங்களுடன் தமிழ்ச் சமூகப் பரப்பில் வலம் வந்தவர்கள் வருபவர்கள். அவர்களின் பின்னால் பல்தேசிய வணிக நிறுவனம் ஒன்று தனது அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் நிதியளித்துக் கொண்டிருந்தது. அது பல்கலை சமூகத்தை சிந்திக்க வைத்தது.

பத்தியாளர் ஒருவர் அடிக்கடி நகைச் சுவையாகச் சொல்வார் ஆமையொன்று மதில் மேல் அமர்ந்திருக்கிறது என்றால் அதனை யாரோ மேலே தூக்கி



வைத்திருக்கிறார்கள் அவ்வாறு தான் கருத்தியலில் தளம்பும் செயற்பாட்டுக் கட்டமைப்பற்ற பத்தியாளர்கள் தமிழ் அரசியலின் முன்னணியில் வந்திருக்கிறார்கள் என்றால் மேற்சொன்ன பின்னணிகள் இல்லாமலில்லை. அவர்கள் கருத்துருவாக்கம் எனும் பேரில் கருத்துத் திணிப்புக்களை பொதுப் புத்தியில் உள் நுழைக்கின்றார்கள். ஆழநோக்கினால் கருத்துக்களில் எடுகோள்களோ தரவுகளோ கருத்தியற் தெளிவோ இலக்கு நோக்கிய சிந்தனைகளோ இருப்பதில்லை.

தேர்தல் அரசியலில் தங்களின் செயற்பாட்டு வெளி தொடர்பாக புரிதல் மாணவர் அமைப்புக்களிற்கு இருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியலை தேர்தல் அரசியலிற்குள் சுருக்கி விடக் கூடாது என்பதில் அவர்களிற்கு போதிய கருத்தியல் புரிதல் இருந்திருக்கின்றது. அதனால் தான் சிவில் சமூக அமைப்புக்களை சனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் களமிறக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை தடுத்து நிறுத்துவதில் முன்னின்றிருக்கிறார்கள். சனாதிபதித் தேர்தலால் ஒன்று திரட்டிய தமிழ் மக்களை பாராளுமன்றத் தேர்தல் சிதறடிக்கும் என்று சிந்தித்திருக்கிறார்கள்.

தமிழ் அரசியலில் பொது வேட்பாளரையும் தேர்தல் புறக்கணிப்பையும் அனைவரும் எதிர் எதிர்த் துருவத்தில் நிறுத்திய போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் அமைப்புத் தான் இரண்டையும் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் அணுகியது. (29.05.2024 அன்றைய ஊடக அறிக்கை). பொது வேட்பாளர் தெரிவு எவ்வாறாக இடம் பெற வேண்டும் என்பதற்கு நிபந்தனைகளை பொதுப் பரப்பில் வைத்ததோடு அவற்றிற்கேற்ப வேட்பாளர் தெரிவு நடைபெற்றால் ஆதரவளிப்பதற்கும் தங்கள் சித்தத்தை அவர்கள் முன் வைத்திருந்தனர். வேட்பாளர் தெரிவோ அவ்வாறன்றி அரசியற்சார்புடன் நடந்தேறியது.

கடந்த காலங்கள் போலன்றி நடப்பிலுள்ள மாணவர் அமைப்பு சிறிலங்காவின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தமிழ் மக்களிற்கான தீர்வோ ஆரம்ப புள்ளியோ கிடையாது என்பதில் இறுக்கமானதும் உறுதியானதுமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. அவர்கள் ஒரு கருத்தியலின் வழி செயற்பாட்டுக் கட்டமைப்பில் முன்நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பொது வேட்பாளரிற்காக முன்னின்ற பத்தியாளர்கள் உள்ளிட்ட சில அமைப்புக்கள் மற்றும் தமிழ் அரசியற் கட்சிகள் அனைத்தும் 13ஆவது திருத்தத்தினுள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு முயற்சிகளை ஏற்றுக் கொண்டு பயனிப்பதில் சித்தமாயிருந்தனர். தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுத்திருந்தன. மக்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொண்ட மற்றும் கடந்த காலங்களில் அரசுடன் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட தரப்புக்களிற்கு வெள்ளையடித்து விடக் கூடாதென்ற எச்சரிக்கை தான் தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய மாணவர் அமைப்பிற்கு மட்டுப்பாடுகளை விதித்தது.

சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவான தமிழ் மக்கள் பொதுச் சபை தேர்தல் முடிவடைந்ததும் உபயோகப் படுத்தப்பட்டு தூக்கி எறியப்படக் கூடிய அச்சம் மாணவர் அமைப்புக் களிடம் காணப்பட்டது. தமிழ் மக்கள் பேரவையின் வரிசையில் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இடம்பெற்றால் மக்களை நட்டாற்றில் விட்டதற்குச் சமமாகும். மக்களுக்கு வரும் காலங்களில் தமிழ்த் தேசிய அரசியலின் மீது நம்பிக்கையற்ற சூழல் உருவாகும். அவ்வாறு மக்கள் அமைப்புக் களினுடைய தோல்வியும் யாரை நம்புவதென்ற விரக்தியுமே தேசிய மக்கள் சக்தி அலையில் வடக்கு — கிழக்கு விழுவதற்குக் காரணம்.

இது போன்ற அச்ச நிலைகளால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு இரண்டு நிபந்தனைகளிற்கு உடன்பட்டால் பொது வேட்பாளரிற்கு ஆதரவளிக்க முன் வந்தது. ஒன்று 13 ஆவது திருத்தம் தொடர்பில் துலக்கமான நிலைப்பாட்டினை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்க வேண்டும்.

இரண்டாவது தமிழ் மக்கள் பொதுச் சபையினை கட்டமைப்பிற்குட்படுத்தி

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



விரிவுபடுத்த வேண்டும். பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்கள் அச்சப் பட்டது போலவே தேர்தல்கள் முடிவடைந்ததும் அந்த மக்கள் அமைப்புக்களை கிடப்பில் போட்டு விட்டனர்.

தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை வெளிப்படுத்தவிருந்த வடிவங்களில் ஒன்று தமிழ்ப் பொது வேட்பாளர் எண்ணக்கரு. பொது வேட்பாளர் எண்ணக்கரு செயற்பாட்டுக் கட்டமைப்பற்ற ஒரு சிலரின் கைகளினுள் சிக்கி ஒட்டு மொத்த தமிழ்த் தேசிய அரசியலையும் விழுங்கி ஏப்பமிட்டுள்ளது. பத்தி எழுத்துக்களில் ஒன்று பிழைத்தால் தூக்கி வீசி விட்டு இன்னொன்று எழுதிக் கொள்ள முயல்வார்கள். அது போல தமிழ் அரசியற் களத்தினை அரசியல் பிழைத்தவர்கள் சமூகப் பொறுப்பற்றுக் கையாண்டிருக்கிறார்கள். அது தான் 2025 ஆம் ஆண்டில் தமிழ் மக்களிற்கான பலன் !

## 2025:- தமிழ்மக்களின் ஆண்டுப் பலன்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) அறிவதற்கும் அந்தந்தத் துறைக்குரிய மக்கள் கட்டமைப்புகள் வேண்டும். அவை இல்லாத வெற்றிடத்தில் தான் அர்ஜுனாக்கள் வெற்றி பெறுகிறார்கள்.எனவே இந்த ஆண்டு நடக்கக்கூடிய தேர்தலில் தேசத்தைத் திரட்டி வெற்றி பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் ஏதாவது புதிய உபாயங்கள் உண்டா?


இருப்பதில் பெரிய கட்சி தமிழரசு கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. இனிமேலும் நிற்கப் போகிறது என்றுதான் தெரிகிறது. அதன் உட்கட்சிப் பிரச்சினைகளைத் தீர்க்க அதனால் முடியவில்லை. எப்படி ஏனைய கட்சிகளை இணைப்பது? தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தோல்விகளில் இருந்து கற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் தான் அவர்கள் அரசியல் தீர்வை நோக்கிய ஒன்றிணைப்பு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் பலமாகக் காணப்படும் சுமந்திரன் அணி அதற்கு ஒத்துழைக்குமா?

மேலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் முன்னணியை நம்புமா? அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் மீது முன்னணி கடந்த காலங்களில் உமிழ்ந்து விட்ட கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை முன்னணி கை விட்டு விட்டதா? இவை தவிர தமிழ் மக்கள் கூட்டணி. தமிழ்த் தேசிய பசுமை இயக்கம். உள்ளிட்ட ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் ஏதாவது உண்டா?

முன்னணியின் ஐக்கிய முயற்சிகள் யாப்புருவாக்க நோக்கிலானவை. அவை தேர்தல் தேவைகளுக்கானவை அல்ல என்று தெரிகிறது. ஆனால் தேர்தல்கள் முதலில் வரும். யாப்பு வருமா வராதா என்பது நிச்சயமில்லை. ஏனென்றால் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்காவது நிமிர்த்தாமல் யாப்பில் கை வைப்பது ஆபத்தானது என்று என்பிபிக்கு விளங்கும்.குறிப்பாக மகா சங்கத்தினர் இப்போதைக்கு ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிக்கு ஆதரவாக இல்லை என்றும் கூறப்படுகிறது. எனவே யாப்புருவாக்கத்தை விடவும் அவசரமானது தேர்தல்கள் தான். உள்ளூரா ராட்சி மன்றத் தேர்தலில் என்பிபி புதிய வெற்றிகளைப் பெறுமாக இருந்தால். அது யாப்புருவாக்க முயற்சிகளில் செல்வாக்குச் செலுத்தும். அவர்கள் தமிழ்த் தரப்பில் பொருட்படுத்த வேண்டிய தேவை இப்பொழுது இருப்பதைவிட மேலும் குறையும். அதை தமிழ்த் தரப்பு எப்படித் தீர்க்கதரிசனமாக ஐக்கியமாக எதிர்கொள்ளப் போகின்றது?

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

## மணமகள்

**ID08121089** (F)
24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai , Masters Degree , Admin , Canada

**ID08121031** (F)
29yrs, 5'4" , Single , Bharani , N/A Sevai , Diploma , HR Coordinator , Canada

**ID08121004** (F)
32yrs, 5'2" , Single , Mrigasheersham , 6 Sevai , Diploma , No work , Sri Lanka

**ID08121002** (F)
32yrs, 5'3" , Single , Aswini , 12 Sevai , Bachelors.. , Process Associate , Sri Lanka

**ID08120927** (F)
34yrs, 5'3" , Single , Kettai , 9 Sevai , Bachelors.. , Product Manager , Canada

**ID08120890** (F)
28yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada

**ID08120771** (F)
30yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Senior Software.. , Sri Lanka

**ID08120696** (F)
31yrs, 5'1" , Single , Thiruvonam , 12 Sevai , Masters Degree , Clinical Research.. , Canada

**ID08120686** (F)
33yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120320** (F)
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054** (F)
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603** (F)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509** (F)
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124** (F)
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Sevai , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732** (F)
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728** (F)
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727** (F)
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723** (F)
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722** (F)
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721** (F)
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718** (F)
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120794** (F)
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

**ID08120795** (F)
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799** (F)
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120803** (F)
21yrs, 4'10" , Single , Not Specified , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120802** (F)
19yrs, 5'4" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120805** (F)
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

## மணமகன்

**ID08121077** (M)
32yrs, 5'9" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Business Owner , Canada

**ID08121068** (M)
32yrs, 5'11" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Entrepreneur , France

**ID08121062** (M)
32yrs, 5'5" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Sri Lanka

**ID08121023** (M)
45yrs, 5'6" , Single , Uthiraadam , 12 Sevai , High School , Packing Supervisor , Canada

**ID08120957** (M)
31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120946** (M)
47yrs, 5'6" , Divorced , Anusham , N/A Sevai , Diploma , Self Employee , Canada

**ID08120938** (M)
46yrs, 5'4" , Single , Aswini , 6 Sevai , Bachelors.. , IT System.. , India

**ID08120936** (M)
38yrs, 5'8" , Single , Karthigai , N/A Sevai , Masters Degree , Civil Engineer , United Kingdom

**ID08120935** (M)
36yrs, 5'5" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , IT , Sri Lanka

**ID08117127** (M)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686** (M)
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639** (M)
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583** (M)
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564** (M)
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356** (M)
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270** (M)
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144** (M)
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698** (M)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481** (M)
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778** (M)
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404** (M)
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828** (M)
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978** (M)
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734** (M)
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08120801** (M)
70yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120796** (M)
30yrs, 5'9" , Single , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120766** (M)
34yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , High School , Business , Canada

**ID08120751** (M)
33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120734** (M)
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120694** (M)
40yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

# வரலாற்றுச் சாபத்திற்கு ஆளாகாமல் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுங்கள்!

- த.கோபாலகிருஷ்ணன் -

அண்மையில் இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் ஒரு விடயமாக இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வண்ணம் இலங்கையின் அரசியலமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்படும் என்ற தனது நம்பிக்கையை-எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். இந்தியா இராஜதந்திர ரீதியாக இதனை விட இப்போதைக்கு இதற்கு மேல் எதனையும் செய்யாது செய்யவும் முடியாது.



இலங்கையின் அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறும்படி அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கூற்றில் 1987 இந்திய — இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கையின் அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்குச் சாதகமாக நிறைவேற்றப் பெற்ற 13 ஆவது மற்றும் 16 ஆவது திருத்தங்களும் உள்ளடங்கியுள்ளன என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் தமது எதிர்கால அரசியலைத் திட்டமிட வேண்டுமே தவிர சும்மா வெறுமனே நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை மீண்டும் மீண்டும் அரைத்த மாவையே அரைப்பதுபோல் உச்சாடனம் பண்ணுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வில் இந்தியாவின் தலையீட்டை ஒரு காலகட்டத்தில் 'இந்திய விஸ்தரிப்பு வாதம்' என வர்ணித்து, இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டிருந்து, இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தையும் அதன் விளைவான 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் மூர்க்கமாக எதிர்த்த ஜே.வி.பியைப் பிரதான தலைமைக் கட்சியாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி (என் பி பி) அரசாங்கத்தின் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை அரசியல் ரீதியாக உணர்ந்து கொண்டு இலங்கைக்கு நன்மையளிக்கும் வகையில் இராஜதந்திர ரீதியாக நடந்து கொள்



கிறாரென்றால், இலங்கைத் தமிழர்கள் அதனை விடவும் அதிகமாக இந்தியாவை அனுசரித்துப் போவதே அரசியல் மதியூகம் நிறைந்தது என்பது சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லை. அதனடிப்படையில் இலங்கைத் தமிழர்களின் அரசியற் பிரதிநிதிகள் பின்வரும் நடவடிக்கைகளைக் கூட்டாக மேற்கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்ததையும், இந்திய அமைதி காக்கும் படையினருக்கு எதிராகப் போர் தொடுத்ததையும் தவறு என்பதை நேர்மையாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்தியா மீது விரல் நீட்டிக் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அவர்களது அரசியல் சித்தாந்தத்தையும் இந்திய அரசாங்கங்கள் எதுவாயினும் அவற்றின் கொள்கை வகுப்பாளர்களும் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையினரும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் தமது 'புலி சார்' உளவியலிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அதன் முழுமையான அர்த்தத்தில் அமுல் செய்யப்படுவதை ஒற்றைக் கோரிக்கையாக முன்வைத்து அதனை இனியும் காலம் தாழ்த்தாது முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்யத் தூண்டும் அரசியல் அழுத்தங்களை இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கைச்சாத்திகளான இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் மீது சமகாலத்தில் பிரயோகிக்கக் கூடிய வினைத்திறன் மிக்க அரசியற் செயற்பாடுகளில் இறங்க வேண்டும்.

கடந்த 14.11.2024 அன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக ரீதியாக வடக்கு கிழக்கு தமிழர்களால் அரசியல் அங்கீகாரம் வழங்கப்பட்ட கட்சிகளாக இலங்கைத் தமிழரசுக் கட்சியும் (எட்டு உறுப்பினர்கள்) அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸூம் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-01 உறுப்பினர்) ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் (01 உறுப்பினர் -ரெலோ) உள்ளன. சுயேச்சையாக வட மாகாணத்தில் இருந்து தெரிவான மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா உள்ளார். இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்ந்த கட்சிகளின் மீதும் வைக்கப்படக்கூடிய விமர்சனங்கள் மற்றும் குற்றச் சாட்டுகளுக்குமப்பால் இவர்களே வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் அங்கீகாரம் பெற்றவர்கள் என்ற அரசியல் பிரதிநிதித்துவ அடையாளத்தைச் சுமந்து நிற்கிறார்கள். இதிலே சுயேச்சைக் குழு உறுப்பினரைத் தவிர்த்துப் பார்த்தால், கட்சிகள் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும்-அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுமே (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) தனிக்கட்சிகளாக உள்ளன. 'ரெலோ' வும் பங்காளி கட்சிகளிலொன்றாகவுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஒரு கூட்டமைப்பாக (Aliance) உள்ளது. இந்த மூன்று கட்சிகளிலும் அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாத கட்சி. மட்டுமல்லாமல் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியா பேசாமல் இருந்தால் அதனால் மகிழ்ச்சி அடையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தலைவராகக் கொண்ட கட்சி. எனவே அப்படிப்பட்ட கட்சியைச் சேர்த்துப் பிடித்து 13ஆவது திருத்தம் பற்றிப் பிரஸ்தாபிப்பது சாத்தியமில்லை. அது பலனளிக்கவும் மாட்டாது. அதனைச் சேர்த்துப் பிடிப்பது வேலியால் போன ஓணானை வேட்டிக்குள் பிடித்துக் கட்டியதற்குச் சமமாகும்.

பாராளுமன்றத்தில் மீதியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே அவற்றின் மீது வைக்கக்கூடிய பல்வேறுபட்ட விமர்சனங்களுக்குமப்பால் 13 ஆவது திருத்தத்தை ஒற்றைக் கோரிக்கையாக முன் வைத்து ஒரு புள்ளியில் இணைந்து செயல்படுவதற்கு ஓரளவு உடன்பாடான கட்சிகளாகும். ஆனால் அதனை அவர்கள் வினைத்திறனுடனும் உண்மையான ஈடுபாட்டு மற்றும் அர்ப்பணிப்புடனும் செயற்பட முன் வருகிறார்களில்லையென்பதே இப்போதைய களநிலையில் தமிழ் மக்களுக்குரிய மிக பாரிய பின்னடைவாகும். எனவே இவ்விரு கட்சித் தலைமைகளிடமும் இப்பத்தி வினயமாக வைக்கும் வேண்டுகோள் என்னவெனில்

தன்னலம்-தன்முனைப்பு-தற்பெருமை எல்லாவற்றையும் களைந்து தமிழ் மக்களின் எதிர்கால நலனை முன்வைத்து இப்போதாவது மேலே முன்மொழியப்பட்டுள்ள அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கக் களமிறங்குங்கள் என்பதே. இல்லையேல் வரலாறு உங்களைச் சபிக்கும்.



# உலகம் போற்றும் ஆத்மிக அன்னை சிவத்தமிழ் செல்வியின் நூற்றாண்டு விழா!

ஈழத்திருநாடு செய்த மாதவத்தால் 1925ம் ஆண்டு ஜனவரி ஏழாம் நாள் தெல்லிப்பழை மண்ணில் உதித்தவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

நிறைந்த கடவுள் பக்தியுடைய அப்பாக்குட்டி தையல்ப்பிள்ளை தம்பதியினருக்கு புத்திரியாகப் பிறந்தவர் அன்னை. சிறுவயதிலேயே ஆத்மிக நாட்டத்துடன் தேவாரா திருவாகத்தை மனனம் செய்வதில் அக்கறை கொண்டவர்.



தனது ஆரம்பக்கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சி கலாசாலை வாழ்வு வரை முதன்மை மாணவியாகத் திகழ்ந்தவர். இளம் வயதிலேயே பண்டிதர் பரிட்சையிலும் சித்தி பெற்றவர். சைவப்புலவர் பரிட்சையிலும் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்றார். ஐம்பதுகளில் மேடைப் பேச்சில் அறிமுகமாகி சமயப் பிரசங்கம் செய்வதில் வல்லவரானார்.

மட்டக்களப்பிலுள்ள சென்ற்சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும், கொழும்பிலுள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் ஆசிரியர் பணியாற்றி 1958இல் நடைபெற்ற கலவரத்தின் பின் அளவெட்டி சதானந்தப் பாடசலையிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஆத்மிகப் பணிக்காக அறுபது வயதிற்கு முன்பே ஒய்வு பெற்றார்.

பெண்கள் மேடைக்கு ஏறுவதில் அஞ்சிய காலத்தில் ஆன்மிக மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் தனது ஆற்றலை மேம்படுத்தி பெரும் புகழைப் பெற்றவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தனது சொல் வன்மையால் பலரது மனங்களை ஈர்த்தவர்.

1965,ல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபையில் இணைந்து 2008ஆம் ஆண்டு வரை மிக அர்ப்பணிப்போடு தேவஸ்தான வளர்ச்சியில் செயற்பட்டவர். தேவஸ்தான தனாதிகாரியாகவும் பின் தலைவராகவும் ஒப்பற்ற பணியாற்றியவர். சிறிய கோயிலாக விளங்கிய ஆலயத்தை தேசம் போற்றும் கோவிலாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

அறச்சிந்தனை நிறைந்த அம்மையார் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை அறச்சாலையாக மாற்றினார். 1982ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை தோற்றுவித்து ஆதரவற்ற பெண் பிள்ளைகளை அரவணைத்து அவர்கள் வாழ்விற்காக அயராது உழைத்தார். அம்மையாரின் உயர்ந்த தொண்டால் தேவஸ்தானப் பணிகள் விரிவடைந்தன நல்லூரில் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்ட பத்தினை அமைத்து நல்லூர் கந்தனைத் தரிசிக்கும் அடியவர்களின் பசி போக்கும் அன்ன தானப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையை மனதில் நிறுத்தி பல மறுமலர்ச்சித் திட்டங்களை எம் மண்ணில் ஏற்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும். போரினால் இடம் பெயர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்த பல ஆயிரம் அகதிகளுக்கு அன்னம் பாலித்து ஆதரவு வழங்கியவர் அம்மையார். ஆலயத்தில் திருமுறைமடம் அமைத்து பன்னிரு திருமுறைகளை சைவ மக்கள் பாதுகாக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டார்.

பல மேடைகளில் அறக்கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறி சமூகத்தை விழிப்படையச் செய்தார். கோயில்களில் நடைபெறும் மிருக பலியை எதிர்த்தார். கோயில்களில் பெண்கள் பஞ்ச புராணம் பாட வேண்டும், கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும், தொண்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனக்குரல் கொடுத்தார்.

ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானத்தில் பெண்கள் தொண்டர் சபையை அமைத்தார். தெல்லிப்பழை இந்து ,ளைஞர் சங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களை ஆற்றுப்படுத்தினார். சமயத்தொண்டு, இலக்கியத் தொண்டு ஆற்றிய சான்றோர்களை விருது கொடுத்து கௌரவித்தார். அம்மையாரின் தூய பணிகள் என்றும் மறக்க முடியாது.

என்னைப் போன்ற ஆன்மிகப் பேச்சாளர்களை ஊக்குவித்தார். 1993இல் தனது பிறந்தநாள் அற நிதியச் சபையை அமைத்தார். 1995இல் வயதில் குறைந்த என்னை தேவஸ்தான நிர்வாக சபையில் சேர்த்து மதிப்புத் தந்தார். சுமார் பதின்னாங்கு ஆண்டுகள் அம்மையாரின் தலைமையில் தேவஸ்தான நிர்வாக சபையில் இணைச்செயலாளராக பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றேன். அம்மையாரிடம் யான் கற்றவை ஏராளம்.

இன்று அம்மையாரின் பொறுப்புக்களை யான் தலைமையேற்று நடாத்துவதற்கு அவரிடம் பெற்ற உன்னதப் பயிற்சியே காரணம் எனலாம். சிறியேனை மிக அன்பாக ஆற்றுப்படுத்திய தாய் எனது வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றார்.

2008ஆம் ஆண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பையும் துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைமைப் பொறுப்பையும் ஏற்ற யான் துர்க்கையம்மனின் நல்லருளாளும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் ஆசியாளும் அவர் பணி தொடர வாய்ப்புக்கிட்டியது. அம்மையார் இறைபதம் அடைந்த பின் அம்மையாருக்கு ஒரு உருவச் சிலை தேவஸ்தானத்தில் நிறுவப்பட்டது. அது மட்டுமன்றி அம்மையாரின் அஸ்தியை பேழையில் கொண்டு வந்து ஆலய மேற்கு திசையில் நினைவாலயத்தினை நிறுவி வழிபாடு செய்து வருகின்றோம். ஆண்டு தோறும் அம்மையாரின் பிறந்த நாளில் அறக்கொடை விழாவும் அம்மையார் இறைபதம் அடைந்த நாளில் குரு பூசையும் எமது தேவஸ்தானம் செய்து வருகின்றது.

அம்மையாரின் பெயரால் ஆண்டு தோறும் ஏழை மாணவர்களுக்கான கல்வி நிதியம், வைத்தியசாலைகளுக்கான உதவிப்பணம் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

ஈழத்திருநாடு செய்த புண்ணியத்தால் இத்தகைய ஒரு புனிதப்பிறவி எம் மண்ணில் பிறந்து மாபெரும் சாதனைகளைச் செய்து தனது எண்பத்தி மூன்றாவது வயதில் விண்ணகம் நோக்கிச் சென்று விட்டார். இவரைப் போன்ற அரிய மனிதர்களை தேடுவது என்பது இன்று கடினமாகி விட்டது. அர்பணிப்பு மிக்க அறம் காத்த தாயை மறக்க முடியாது. அன்னார் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடையும் வேளை இவரை நீளநினைந்து வழிபாடு செய்வதே எம்கடனாகும். அன்னையே உம்மை இனி எப்பிறப்பில் காண்போம் அம்மா!!!

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**
**தலைவர் - சிவபூமி அறக்கட்டளை**
**இலங்கை**



# தமிழரசில் சுமந்திரன்:-
## காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையல்ல

**- அழகு குணசீலன் -**

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டமும், பொதுச்சபையும் திருகோணமலையில் கூடி கலைந்தது போல் வவுனியாவில் மத்திய செயற்குழு கூட்டம் கூடி ஊடகங்களுக்கு பம்பலாக கலைந்திருக்கிறது. நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளுக்காக ஏறி, இறங்க வேண்டிய நிலையில் நடந்து முடிந்த வவுனியா கூட்டம் கட்சியின் உள் மோதல்களுக்கு தீர்வு காணப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தையும், இது தீர்வல்ல பிரிவு என்ற தோற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது. ஆகக் குறைந்தது முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஆதரவாளர்களுக்கு இது முள்ளை முள்ளால் எடுத்த நிம்மதி. தமிழரசுக்கு தீர்வில்லாவிட்டாலும் சுமந்திரன் அணிக்கு தீர்வு.

தமிழரசுகட்சியில் – தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் சுமந்திரனின் வருகை பலர் நினைப்பது போன்று ஒரு அரசியல் விபத்தோ, அரசியல் தற்செயல் நிகழ்வோ அல்ல. நன்கு திட்டமிட்ட நகர்வு. விடுதலைப்புலிகள் செயலிழக்கும் வரையும் ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரையும் கொக்கு காத்திருந்த கதை. 2001இல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டு அதற்கு தலைவராக இரா. சம்பந்தன் புலிகளால் நியமிக்கப்பட்டபோதும் மானசீகமாக சம்பந்தன் புலிகளின் அரசியலை ஆதரிக்கவில்லை.

ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வு. இதுவே சம்பந்தனது மட்டும் அல்ல ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும் பின்கதவு அரசியலாக இருந்தது. இது தமிழீழம் ஒரு வில்லங்கமான காரியம் என்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் வார்த்தைகளின் உள்ளீட்டை தமிழ்மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த காலம் என்பதால் இதற்கான நியாயப்பாடு தமிழர் அரசியல் தராசில் ஒரு பக்க தராசுத் தட்டை கதிக்கச்செய்தது.

மறு பக்கத்தில் புலிகள் தவிர்ந்த ஆயுத போராட்ட அமைப்புக்களின் பாராளுமன்ற அரசியல் பிரவேசம் இதை மேலும் உறுதிப்படுத்தியது. இந்த அமைப்புக்களும் – கட்சிகளும் தமிழீழத்தை புலிகளின் துப்பாக்கி தங்களை குறி பார்த்ததால் ஆயுத போராட்டத்தில் தாங்களாகவே தோற்றும், தோற்கடிக்கப்பட்டும் இருந்த நிலையில் கொண்ட கொள்கையில் அரசியல் கற்பு இவர்களிடமும் இருக்கவில்லை.

இந்த நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அரசியல் செயற்பாட்டு துடுப்பு விடுதலைப்புலிகளின் கைகளில் இருந்தது. அதுவரை தலையாட்டும் அரசியல் செய்த கூட்டமைப்பு 2009 மே மாதத்திற்கு பின்னர் மெல்ல மெல்ல சுயரூபத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது.

ஒரு புறம் கிளிநொச்சி சந்திப்புக்களில் ஒன்றும், கொழும்பு சந்திப்புக்களில் இன்னொன்றும் பேசி வந்த இரா.சம்பந்தருக்கும், எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான கொழும்பு உறவில் நெருக்கம் ஏற்பட்டது. சம்பந்தரின் நம்பிக்கையை திட்டமிட்டபடி சுமந்திரன் பெற்றார்.

சாத்தியமற்ற தமிழீழம், பிராந்திய, சர்வதேச பூகோள அரசியல் சூழல்கள் பற்றிய கலந்துரையாடல்களில் இவர்கள் இருவரும் ஒரு புள்ளியில் சந்தித்தனர். விளைவு 2010 பாராளுமன்ற தேர்தலில் முள்ளிவாய்க்கால் வலியோடு தமிழ்மக்கள் பெற்றெடுத்த தேசிய பட்டியல் குழந்தையை தூக்கி சாய்மனைக்கதிரை கொழும்பு வாசி சுமந்திரனுக்கு சம்பந்தர் கொடுத்தார்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை தங்கள் திசைக்கு திருப்ப புலிகளின் கையில் இருந்த துடுப்பு சம்பந்தருக்கும், சுமந்திரனுக்கும் கைமாறியது. சம்பந்தரின் வயோதிபம் அவருக்கு நம்பிக்கையான ஒரு கையாளைத் தேடியது. அந்த இடத்தை சம்பந்தர் சுமந்திரனுக்கு கொடுத்தார். மறுபக்கத்தில் சம்பந்தரின் முதுமையை சுமந்திரன் பயன்படுத்தி, கட்சியில் முக்கிய செயற்பாட்டாளராக மாறத் தொடங்கி



னார்.

சம காலத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தமிழரசு உள்ளிட்ட பங்காளிகள் கட்சிகளின் பலவீனங்களை சுமந்திரனால் இலகுவாக அடையாளம் கண்டு அரசியல் செய்ய முடிந்தது. பாராளுமன்றத்திற்கு உள்ளும், வெளியும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முற்று முழுதாக சுமந்திரனில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. சம்பந்தர் எதிர்கட்சி தலைவருக்கு வழங்கப்பட்ட அனைத்து வரப் பிரசாதங்களுடனும் கொழும்பு அரசாங்க மாளிகையில் முடங்கிப் போனார். இது ஒரு வகையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் முதுமையை அ.அமிர்தலிங்கம் பயன்படுத்தியதற்கு ஒப்பானது.

இந்த அரசியல் சூழ்நிலையில், சரியாக காலக்கணக்கை பார்த்து வந்த எம்.ஏ. சுமந்திரன் தருணம் பார்த்து இரா.சம்பந்தர் தலைமை பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையை பகிரங்கமாக முன்வைத்தார். இது பல விமர்சனங்களுக்கு வழிவிட்டபோதும் தமிழ்த்தேசிய அரசியலை முன்னோக்கி நகர்த்துதல் என்பதில் சாதகமானதாக நோக்கப்பட்டது.

ஆனால் சுமந்திரனின் தனிப்பட்ட, அரசியல் குணாம்சங்களை நன்கு அறிந்திருந்தவர்கள், சம்பந்தரின் செயற்பாடற்ற பலவீனமான அரசியலை அறிந்திருந்தும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். ஆனால் சுமந்திரனின் அரசியல் தந்திரோபாய உட்கட்சி நகர்வுகளை அறியாதவர்களும், அவரது வாதத்திறமையையும், அரசியல் நியாயப்படுத்தல்களையும் சர்வதேச உறவுகளையும், பாராளுமன்ற செயற்பாடுகளையும் மட்டும் அறிந்தவர்களும் சுமந்திரனுக்கு பின்னால் ஆதரவாக நின்றனர்.

2010இல் இருந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் பல்வேறு காரணங்களுக்காக உடைவுகள் ஏற்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலில் சுமந்திரனின் பங்காளிகள் தனித்து போட்டியிடல் என்ற தொழில்நுட்பம் – பொறிமுறை தமிழ்த்தேசிய கூட்டமைப்பை தமிழரசுக்கட்சி என்ற நிலைக்கு கொண்டு வந்தது.

2015, 2020 தேர்தல்களில் சுமந்திரன் மீதான மக்கள் நம்பிக்கை படிப்படியாக குறைவடைந்து 2024 இல் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்டார். இதற்கு என்னதான் காரணங்களை கூறினாலும் அந்த காரணங்களில் சுமந்திரனின் கடந்த 15 ஆண்டு கால தமிழ்த்தேசிய அரசியலுக்கும் பங்குண்டு. அதை அவர் சுய விமர்சனம் செய்ததாக தெரியவில்லை. தனது நிலைப்பாடே சரியென தனித்து ஓடும் சுமந்திரன் இதை செய்வார் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. பாராளுமன்ற அரசியலில் சம்பந்தரினதும், பங்காளிக்கட்சிகளினதும் பலவீனங்களை பயன்படுத்தி பாராளுமன்ற குழுவை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த சுமந்திரன் அடுத்த நகர்வாக தமிழரசு கட்சியை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர களத்தில் இறங்கினார். மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவ பலவீனமும், வயோதிபமும் சம்பந்தர் காலம் போன்று மீண்டும் ஒரு வாய்ப்பை சுமந்திரனுக்கு வழங்கியது.

கட்சிக்குள் தனக்கு சாதகமாக சி.வி.கே.சிவஞானம், சத்தியலிங்கம், சாணக்கியன், துரைராசசிங்கம் போன்றவர்களை வளைத்துப் போட்ட சுமந்திரன் தலைமை பதவிக்கு போட்டியிட்டார். எனினும் அவரால் வெற்றி பெறமுடியவில்லை.

வெற்றி பெற்ற சி.சிறிதரன் பதவியேற்க முடியாதவாறு வழக்கு தாக்கலானது. இந்த இழுபறியில் மாவை சேனாதிராஜாவை பதவியில் இருந்து நீக்கி பதில் தலைவர் ஒருவரை தேர்வு செய்யும் முயற்சியில் அதுவும் தனது சார்பான சி.வி.கே சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அது சுமந்திரனுக்கு வெற்றியே. தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் பதவியும் சுமந்திரனுக்கு உறுதியானது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியில் சுமந்திரனின் நிலைப்பாடே கட்சியின் நிலைப்பாடாக முடிவுகளாக எடுக்கப்படுகின்ற நிலை தொடர்கிறது. அதற்கு வாய்ப்பு இல்லாத நிலை காணப்படுமாயின், ஏதோவொரு வகையில் அதற்கான காலம் கனியும் வரை முடிவுகளை எடுப்பதை சுமந்திரன் தனது அணியின் மூலம் சாதித்து வருவது வழக்கம்.


இதற்கான வாய்ப்பை சுமந்திரன் தேடிச் செல்லவில்லை. மாறாக அது காலடிக்கு வரும் வரையும் காத்திருந்து காரியம் செய்கிறார். அந்த வாய்ப்புக்களை அவரின் காலடியில் கொண்டு குவிப்பவர்களாக இரா. சம்பந்தருடன் மாவை.சேனாதிராஜா, சி.சிறிதரன், பா.அரியநேத்திரன், சி.வி. தவராசா போன்றவர்கள் இருக்கிறார்கள். அவற்றை சுமந்திரன் அணி பயன்படுத்துகிறது. இதனால் கட்சியில் சுமந்திரனின் அடைவுகள் காகம் இருக்க பனம் பழம் வீழ்ந்த கதையல்ல.

எம்.ஏ. சுமந்திரனின் அதே அரசியல் குணாம்சங்களை கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசு கட்சிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். இவரின் சிறிதரன், செல்வம் ஊடான நகர்வு நிச்சயமாக சுமந்திரனுக்கு எதிரானது என்பது வெளிச்சம். இது தமிழரசுக்கட்சியின் எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் என்ன?


ஒரு சந்தர்ப்பத்தில் சுமந்திரனை திருத்த முடியாது என்று சொன்ன கஜேந்திரகுமார், சுமந்திரன் இல்லாத பாராளுமன்றத்தில் வகிக்கப் போகின்ற முக்கியத்துவம் என்ன? இது பொன்னருக்கு பொல்லு கொடுத்த கதையாக அமையலாம்...




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும். யோசனைகளை அலுவலகத்திலும் குடும்பத்திலும் மதிப் பார்கள். குடும்பத்தில் உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து. கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில் செய்பவர்கள் உங்கள் வியாபாராத்தை பெருக்கும் காலமிது.





ரிஸபராசி அன்பர்களே! எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவும். பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். தங்கள் உடல் நிலை சிறப்பான முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவிக் கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. . தொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யும் போது மனைவியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.





மிதுனராசி அன்பர்களே! மிகுந்த பொருட்செலவில் சுபவிரயங்கள், எடுத்த காரியங்களில் தடை, எதுவுமே நேர்மாறாக இருப்பது என கடந்த காலங்களை மிகுந்த சிரமத்துடன் கழித்தீர்களல்லவா, இனி வரும் காலம் மிகவும் நல்லகாலம். உங்கள் பேச்சை நீங்களே கேட்காமல் இருந்து வந்த நிலைமை மாறும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து பேசுவது நல்லது. துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்




கடகராசி அன்பர்களே! தடங்கல்கள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நல்ல நல்ல விஷயங்கள். விஷேசங்கள் நடக்கும். உங்கள் தைரியத்திற்கு இறைவனை வேண்டுங்கள். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டும். முன்னோர்களை அமாவாசை தோறும் வழிபடவும். தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகள் செய்யும் போது கவனம் தேவை. அனுபவமிக்கவர்களுடன் கலந்து ஆலோசித்து முதலீடு செய்வது நலம்.





சிம்மராசி அன்பர்களே! தீவிர முயற்சியால் தடைபட்டிருந்த திருமணம், கல்வி, என தடையாக இருந்த அனைத்து காரியங்களும் தடைகள் விலகி ஒன்றன் பின் ஒன்றாக சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் நடை பெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.




கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளை இரு மடங்காக்குங்கள், வெற்றிகள் உங்களைத் தேடி வரும் காலமிது. உங்கள் பொன்னான நேரத்தை அடுத்தவருக்காக வீணாக்காதீர்கள். அடுத்தவரை பற்றி பேசா விட்டாலும் நீங்கள் கூறியதாக சிலர் பற்ற வைக்க கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! நல்ல விஷயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு. மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விஷயங்களில் அவசரம் வேண்டாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். தொழிலில் லாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்ய தகுதியானவர்களின் ஆலோசனைகளை பெற்று செய்யவும். உத்யோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை.





விருச்சிகராசி அன்பர்களே! கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையும். உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகள் செய்ய தயங்க வேண்டாம். தாய் தந்தையரை வணங்கி எந்த காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே.








தனுசுராசி அன்பர்களே! வீடு. மனை வாங்க தடை, சுபகாரியம் செய்வதற்கு தடை, நற் செயல்கள் எது செய்வதற்கும் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! தைரியமாக எதையும் எதிர் கொள்வீர்கள். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகளில் யாரையும் நம்பவேண்டாம். நல்ல நண்பர்களால் ஆதாயம் நல்ல மதிப்பு கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர் பார்த்திருந்த தனலாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் செய்பவர்கள் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வது அவசியம்




மீனராசி அன்பர்களே! வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். இயந்திரங்கள், நீர்நிலைகளில் கவனம் தேவை. சோம்பல் கூடவே கூடாது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நண்பர்கள் உதவிகள் செய்வர். லாபகரமான முதலீடுகள் செய்வீர்கள்.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.


# ஸ்ரீலங்காவை கிளின் செய்வது?

(9ம் பக்கத் தொடர்ச்சி) அதாவது உடலில் ஏற்பட்ட காயத்துக்கு உள் மருந்து கொடுக்காமல் காயத்தைக் கழுவி மருந்து கட்டுவது போன்றது. அனுர அரசாங்கம் அதைத் தான் செய் யும். அதற்கு மேல் போய் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு அனுமதி க்காது. குறிப்பாக மகா சங்கம் இப்போதைக்கு அனுமதிக்காது. எனவே பொருளாதார நெருக் கடியை எப்படிச் சமாளிக்கலாம் என்று தான் என்பிபி அரசாங்கம் சிந்திக்கும்.

நாட்டை முதலீட்டு கவர்ச்சி மிக்கதாகக் கட்டி எழுப்புவதென்றால் முதலில் அதனை இன முரண்பாடுகள் இல்லாத ஒரு நாடாகக் கட்டியெழுப்ப வேண்டும். தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்ததை வைத்து இனப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்றும் முரண்பாடு நீங்கி விட்டது என்றும் கற்பனை செய்யக்கூடாது. ஸ்ரீலங்காவை கிளீன் செய்வது நல்லது. ஆனால் சிறீலங்காவின் அரசியல் கறை அதாவது உண்மையான கறை எது? இன முரண்பாடுகள் தான் அந்தக் கறை. அதை அகற்றாமல் நாட்டின் அரசியல் கலாசாரத்தைக் கிளீன் பண்ண முடியுமா?

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உத்தேச...

(27ம் பக்கத் தொடர்ச்சி) பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சகலரும் விடுவிக்கப்பட வேண்டும்.

## தேர்தல் சீர்திருத்தங்கள்

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களாக இருந்தாலென்ன அல்லது வேறு எந்த சிறுபான்மை இனங்களாக இருந்தாலென்ன நாடு பூராவும் சிதறிவாழும் இனத்துவ!மற்றும் அரசியல் சிறுபான்மையினருக்கும் சிறிய கட்சிகளுக்கும் இலங்கையின் பல கட்சி ஜனநாயக கட்டமைப்புக்குள் போதுமான பிரதிநிதத்துவம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யுமுகமாக அவர்கள் பாராளுமன்றத்துக்கும் மாகாணசபைகளுக்கும் பிரவேசிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

அதனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தொடரவேண்டும். தேர்தல் முறைமைக்குள் அதை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## ஒரு நாடு! ஒரு சட்டக் கோட்பாடு!

நாட்டில் மத்திய அரசாங்கத்தை தவிர வேறு எந்த சட்டவாக்க அமைப்புகளும் இருப்பதை இல்லாமல் செய்வதற்கு அல்லது தடுப்பதற்கும் அர்த்த புஷ்டியான எந்தவொரு அதிகாரப் பரவலாக்கத்தையும் தடுப்பதற்கும் ' ஒரு நாடு.ஒரு சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப் பட்டது.

இது தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது வழமைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதையும் தங்களது கலாசாரம், சம்பிரதாயங்கள் மற்றும் நடைமுறைகளைப் பேணுவதையும் தடுக்கும். அத்தகைய ஆணைக்குழு இல்லாமல் செய்யப்பட்டு இலங்கையில் வாழும் சகல இனங்களினதும் தனித்துவ அடையாளங்களும் உரிமைகளும் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## நேர்மறையான பதில் இல்லை

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்த நேரத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்த கூட்டுக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டன. அதற்கு பிறகு பெருமளவு நிகழ்வுகள் இடம்பெற்று விட்டன. ஆனால் கடிதத்துக்கு புதுடில்லியில் இருந்து இது வரையில் நேர்மறையான பதிலையோ அல்லது முன்னோக்கிய நகர்வையோ காணமுடியவில்லை.

இலங்கை தமிழ்க்கட்சிகளும் கூட இந்த விவகாரத்தில் ஒரு அவசரத்தைக் காண்பிக்கவில்லை. இணைப்பில் தமிழ்க் கட்சிகளினால் முக்கியத்துவப் படுத்தப்பட்ட நிலைவரத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய பின்புலத்திலேயே ஜனாதிபதி திசாநாயக்க இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் இறுதியில் இரு நாடுகளினதும் அரசாங்கங்களினால் வெளியிடப்பட்ட விரிவான கூட்டறிக்கையில் 13வது திருத்தம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஜனாதிபதி திசாநாயக்க செய்தியாளர்கள் சந்திப்பில் அதை அலட்சியம் செய்தார்.

பிரதமர் மோடி மாத்திரமே தமிழ் மக்களின் அபிலாசைகள் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடத்துவது தொடர்பிலான கடப்பாடு பற்றி சில விடயங்களை செய்தியாளர்கள் முன்னிலையில் கூறினார். கூட்டறிக்கையில் அல்லது செய்தியாளர்கள் சந்திப்பில் இலங்கை ஜனாதிபதியும் இந்திய பிரதமரும் வெளியிட்ட கருத்துக்களில் 13 வது திருத்தம் குறிப்பிடப்படாதது பிரத்தியேகமாக தெரிந்தது. இதன் அர்த்தம் 13 வது திருத்தம் விரைவில் அதன் விதியைச் சந்திக்கப்போகிறது என்பதா?

## தெளிவான முன்னறிவிப்பு?

புதிய அரசியலமைப்பு ஒன்று வரும்வரை 13 வது திருத்தம் நடைமுறையில் இருக்கும் என்று தமிழ்அரசியல் தலைவர்களுக்கு ஜே.வி.பி.யின் தலைவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதானால், 13 வது திருத்தத்துக்கு நேரப்போகிற விரும்பத்தகாத விளைவுக்கான தெளிவான முன்னறிவிப்பு வந்திருக்கிறது. ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வர உத்தேசிக்கும் புதிய அரசியலமைப்பில் 13வது திருத்தத்தில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் அளவு சேர்த்துக் கொள்ளப்படுமா இல்லையா என்பதே முக்கியமான கேள்வியாகும்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# கனடாவின் அடுத்த பிரதமர் பதவிப் போட்டியில் முந்தும் தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அனிதா ஆனந்த்!



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் அறிவிப்பைத் தொடர்ந்து இந்திய வம்சாவளியை சேர்ந்த வரும் தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவருமான அனிதா ஆனந்த், அந்நாட்டின் அடுத்த பிரதமராக பதவியேற்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

லிபரல் கட்சியின் புதிய தலைவரை தேர்வு செய்ய அந்தக் கட்சி முடிவு செய்திருக்கிறது. இது தொடர்பாக லிபரல் கட்சி தொண்டர்களிடையே விரைவில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதில் அதிக வாக்குகள் பெறுபவர் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார். அவரே கனடாவின் புதிய பிரதமராகவும் பதவியேற்பார். இப்போதைய சூழலில் கனடா போக்குவரத்துத் துறை அமைச்சரும் லிபரல் கட்சியின் மூத்த தலைவருமான அனிதா ஆனந்த் முன்னணியில் உள்ளார். இவரது தந்தை ஆனந்த், தமிழகத்தை பூர்விகமாகக் கொண்டவர். தாய் சரோஜ் ராம் பஞ்சாபை சேர்ந்தவர் ஆவர்.

ட்ரூடோ பதவி விலகி நிலையில், அடுத்த கனடா அதிபர் ஆகும் ரேஸில் ஐந்து பேர் முன்னிலையில் உள்ளனர். அதில் தமிழகத்தை பூர்விகமாக கொண்ட அனிதா ஆனந்தும் உள்ளார். 57 வயதான அவர், தற்போது கனடாவின் போக்குவரத்துத் துறை அமைச்சராக உள்ளார். இதற்கு முன்பு பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார். கடந்த 2019-ல் அவர் அரசியலில் என்ட்ரி கொடுத்தார். அப்போது முதலே அவர் லிபரல் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக உள்ளார். குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் பொலிட்டிக்கல் சயின்ஸில் இளங்கலை முடித்துள்ளார். ஆக்ஸ்போர்டு மற்றும் டல்ஹவுசி பல்கலைக் கழகங்களில் இளங்கலை சட்டம் பயின்றவர். டொராண்டோ பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்பில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். நோவா ஸ்கோடியாவின் கென்ட்வில்லில் அவர் பிறந்தார். அவரது பெற்றோர் எஸ்.வி. ஆனந்த் — சரோஜ் டி. ராம் என இருவரும் மருத்துவர்கள். அவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

அரசியல் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புகளை வழங்கி உள்ளார். பொது சேவைத் துறை அமைச்சராக இருந்தபோது கரோனா தடுப்பூசிகளை உறுதி செய்த செயலுக்காக மக்கள் மத்தியில் பாராட்டுகளை பெற்றவர். அவர் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த போது தான் ரஷ்யா — உக்ரைன் இடையிலான போரில் உக்ரைனை ஆதரிப்பது என்ற முடிவை கனடா எடுத்தது.

அமைச்சரவை மாற்றத்தின் போது அவர் கருவுல வாரிய பொறுப்புக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் கேபினட் அளவில் முக்கியஸ்தராக இருந்தார். கடந்த டிசம்பரில் போக்குவரத்து துறை அமைச்சராக பொறுப்பேற்றார்.

அதே போல் இந்திய வம்சாவளியை சேர்ந்த லிபரல் கட்சியின் மூத்த தலைவர் ஜார்ஜ் சாஹலும் பிரதமர் பதவிக்கான போட்டியில் உள்ளார். இவர்கள் தவிர லிபரல் கட்சியின் மூத்த தலைவர்கள் மெலானி ஜோலி, கிறிஸ்டி கிளார்க், மார்க் கார்னி, கிறிஸ்டியா பிரீலேண்ட், டோமினிக் லீபிளாங்க் ஆகியோரும் பிரதமர் பதவிக்கு போட்டியிடுகின்றனர்.

வரும் 27-ம் தேதி கனடா நாடாளுமன்றம் கூடுகிறது. அப்போது ஆளும் லிபரல் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வர கன்சர்வேட்டிவ் கட்சி திட்டமிட்டு உள்ளது. இதன்படி வரும் மார்ச் மாதம் கனடா நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும். இப்போதைய நிலையில் ஆளும் லிபரல் கட்சிக்கு பெரும்பான்மை இல்லை.

இது குறித்து அரசியல் நோக்கர்கள் கூறும்போது, நம்பிக்கை வாக்கெடுப்பில் லிபரல் கட்சியின் ஆட்சி கவிழுமா அல்லது அந்த கட்சி பெரும்பான்மையை நிரூபிக்குமா என்பதை துல்லியமாக கணிக்க முடியவில்லை. அரசு கவிழ்ந்து உடனடியாக நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்படலாம் அல்லது லிபரல் கட்சியின் புதிய பிரதமர் பதவியேற்று வரும் அக்டோபரில் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படலாம் என்று தெரிவித்துள்ளனர்.

**எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடாக 32 ஆண்டுகளாக வெளி வரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 04 ஏப்ரல் 2025 முதல் மீண்டும் வாராந்தப் பத்திரிகையாக வெளி வரவுள்ளது. எனது கண்ணில் ஏற்பட்ட நோய் காரணமாக கடந்த யூலை மாதம் முதல் வாரந்தோறும் மின்னிதழாகவும் மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாகவும் வெளி வருவது குறிப்பிடத்தக்கது.**




# சர்வதேசத்தை உற்று நோக்க வைத்த ட்ரம்பின் ஊடகவியலாளர் சந்திப்பு!

வெள்ளை மாளிகைக்குத் திரும்புவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப், பனாமா கால்வாய் மற்றும் கிரீன்லாந்தைக் கையகப்படுத்துவதற்கு இராணுவ பலத்தை பயன்படுத்துவதை நிராகரிக்க மறுத்துள்ளார்.

அதேநேரம், கனடாவை 51ஆவது அமெரிக்க மாநிலமாக மாற்றுவதற்கு பொருளாதார சக்தியை பயன்படுத்துவதாகவும் அச்சுறுத்தினார்.

எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப், கடந்த 07 ஜனவரி 2025 செவ்வாய்க்கிழமை புளோரிடாவில் உள்ள Mar-a-Lago ரிசார்ட்டில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் உரையாற்றும் போது இதனைக் கூறினார்.

மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்கா வளைகுடா என்று மறுபெயரிடுவதாகவும் இதன் போது அவர் உறுதியளித்தார்.

## கனடாவை 51வது மாநிலமாக்கும் திட்டம்

2024 நவம்பர் 5 தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்ததில் இருந்தே, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்ப் கனடாவை 51 ஆவது அமெரிக்க மாநிலமாக மாற்றும் யோசனையில் மூழ்கியுள்ளார். அவர் பல சமூக ஊடக இடுகைகளில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சில பதிவுகளில் கடந்த திங்க என்று இராஜினாமா செய்த பிரதமரை கவர்னர் ட்ரூடோ என்றும் குறிப்பிட்டு



ள்ளார்.

செவ்வாயன்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கனடாவை அமெரிக்காவிற்குள் உள்வாங்குவதற்கான தனது யோசனையை நிறைவேற்ற இராணுவ நடவடிக்கையைப் பயன்படுத்துவீர்களா என்று ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், கனடா மற்றும் அமெரிக்காவை ஒன்றாக இணைக்க பொருளாதார சக்தியை பயன்படுத்துவதை பரிசீலிப்பதாக கூறினார். அத்துடன் கனேடிய பொருட்களுக்கான அமெரிக்க செலவுகள் மற்றும் நாட்டிற்கான இராணுவ ஆதரவையும் ட்ரம்ப் இதன் போது குறை கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில், ட்ரம்ப் பதவியேற்றவுடன் இரு அண்டை நாடுகளும் அமெரிக்காவுக்குள் குடியேறும் மற்றும் போதைப்பொருள் ஓட்டத்தை நிவர்த்தி செய்யாவிட்டால் கனேடிய மற்றும் மெக்சிகன் பொருட்களுக்கு 25 சதவீத வரிகளை விதிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவித்தார். இந்த நிலையில் ட்ரம்பின் கருத்துக்கு கனடா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.



இது குறித்து கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி கூறுகையில், அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்பின் கருத்துக்கள் கனடாவை ஒரு வலுவான நாடாக மாற்றுவது பற்றிய முழுமையான புரிதல் இல்லாததைக் காட்டுகிறது.

நமது பொருளாதாரம் வலுவாக உள்ளது. எங்கள் மக்கள் வலிமையானவர்கள். அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் ஒரு போதும் பின்வாங்க மாட்டோம் என்றார்.

அதேபோல் ட்ரூடோ கூறும்போது, அமெரிக்காவுடன் கனடா இணைவதற்கு வாய்ப்பே இல்லை என்றார்

## கிரீன்லாந்தின் பனாமா கால்வாய் கையகப்படுத்த முயற்சி

செவ்வாயன்று ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ட்ரம்ப், பனாமா கால்வாயை மீட்டெடுப்பது மற்றும் டென்மார்க்கிலிருந்து கிரீன்லாந்தைக் கைப்பற்றுவது குறித்தும் பேசினார். மேலும் தனது விரிவாக்கத் திட்டங்களைச் செயல்படுத்த இராணுவ பலத்தை பயன்படுத்துவதையும் நிராகரிக்க மறுத்துவிட்டார்.

மத்திய அமெரிக்க வர்த்தகப் பாதை மற்றும் டென்மார்க்கின் தன்னாட்சிப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டைப் பெற முயற்சிக்கும் போது, இராணுவ அல்லது பொருளாதார வற்புறுத்த லைப் பயன்படுத்த மட்டோம் என்று உலகிற்கு உறுதியளிக்க முடியுமா என்று ஊடகவியலாளர்கள் ட்ரம்பிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, இல்லை, என்னால் அது தொடர்பில் உறுதியளிக்க முடியாது. பனாமா கால்வாய் எங்கள் இராணுவத்திற்காகக் நிர்மாணிக்கப்பட்டது என்றார்.

தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்து, ட்ரம்ப் பனாமா கால்வாயை இணைக்கும் தனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும் கடந்த மாதம் உயிரிழந்த முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரையும் சாடிப் பேசிய அவர், ஜிம்மி கார்ட்டர் மேற்கொண்ட ஒப்பந்தப் பேச்சுவார்த்தை 51 மைல் நீர்வழியின் முழு கட்டுப்பாட்டையும் பனாமாவுக்கு வழங்கியதாக கூறினார்.


மேலும், கிரீன்லாந்தை வாங்குவதற்கான தனது விருப்பத்தை டென்மார்க் எதிர்த்தால், அது அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்றும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கு பதிலளித்த டென்மார்க், கிரீன்லாந்து விற்பனைக்கு இல்லை என்று கூறியது. நாங்கள் நெருங்கிய கூட்டாளிகள் மற்றும் பங்காளிகளாக இருக்கும்போது நிதி ரீதியாக ஒருவருக்கொருவர் சண்டையிட இது ஒரு நல்ல வழி அல்ல என்று டென்மார்க் பிரதமர் மெட் ஃபிரடெரிக்சன் செவ்வாய் இரவு கூறினார்.

## மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடாவாக்க திட்டம்

அதே செய்தியாளர் கூட்டத்தில் ட்ரம்ப் தனது நிர்வாகம் மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அமெரிக்கா வளைகுடா என்று மாற்ற முயற்சிப்பதாக அறிவித்தார்.

மெக்ஸிகோ வளைகுடாவின் பெயரை அழகான வளையத்தைக் கொண்ட அமெரிக்க வளைகுடா என்று மாற்றப் போகிறோம். இது நிறைய பிரதேசங்களை உள்ளடக்கியது. அமெரிக்கா வளைகுடா! என்ன அழகான பெயர்.



அது பொருத்தமானது என்று அவர் கூறினார். பெட்ரோலியம் நிறைந்த மெக்ஸிகோ வளைகுடா நீர்நிலை உலகின் ஒன்பதாவது பெரியதாகும். மேலும் 1500ஆம் ஆண்டுகளில் இருந்து அது மெக்ஸிகோ வளைகுடா என வரைபடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மெக்சிகோ வளைகுடாவை மறு பெயரிடுவதற்கான ட்ரம்பின் வாக்குறுதியானது, வட அமெரிக்காவின் மிக உயரமான மலை சிகரமான தெனாலியின் பெயரை மவுண்ட் மெக்கின்லி என மாற்றுவதற்கான அவரது முந்தைய சபதத்தையும் எதிரொலித்தது.

பூர்வீக அமெரிக்கர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அலாஸ்கன் மலையின் பெயரை முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மாற்றினார்.

2023 ஒக்டோபரில் இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடுத்த போது சிறைபிடித்த அனைத்து பணயக்கைதிகளையும் ஹமாஸ் விடுவிக்காவிட்டால், தான் வெள்ளை மாளிகைக்கு திரும்பும் நேரத்தில், மத்திய கிழக்கில் அனைத்தும் மோதல்கள் வெடிக்கும் என்ற தனது அச்சுறுத்தலை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்ப் ஊடகவியலாளர் சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தினார்.

அத்துடன் இது ஹமாஸுக்கும், வெளிப்படையாக யாருக்கும் நல்லதாக அமையாது என்றும் ட்ரம்ப் எச்சரித்தார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலின் போது, சுமார் 250 பணயக்கைதிகள் காஸாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 96 பேர் எஞ்சியுள்ளனர். இதில் 34 பேர் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

## நேட்டோ செலவு

நேட்டோ உறுப்பினர்கள் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை பாதுகாப்பிற்காக செலவிட வேண்டும் என்று ட்ரம்ப் கூறினார். இது தற்போதைய 2 சதவீத இலக்கில் இருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

பதவியேற்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதி, பெரும்பாலான நேட்டோ உறுப்பினர்கள் தங்கள் நியாயமான பங்கை செலுத்தவில்லை என்று அடிக்கடி முறைப்பாடு அளித்தார். மேலும் அவர் தேர்தல் பிரச்சாரத்தின் போது பாதுகாப்பு பங்களிப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரினார்.

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பும் 13வது திருத்தமும்

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- DBS ஜெயராஜ் -



இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க டிசம்பர் 15 – 17 இந்தியாவுக்கு தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பினார். புதுடில்லிக்கான அவரின் மூன்று நாள் விஜயத்தின் காட்சிகள் நேர்மறையாக பாராட்டப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி திசாநாயக்க ஜனதா விமுக்தி பெரமுனவினதும் (ஜே.வி.பி.) அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின தும் தலைவராக இருக்கிறார்.

அவரின் வெற்றிகரமான இந்திய பயணம் ஜே.வி.பி.யின் கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையிலான பொருத்தமின்மை மீது கவனத்தைக் குவிக்க வைத்திருக்கிறது.

இந்தியா தொடர்பிலான ஜே.வி.பி.யின் கடந்தகால கடும் போக்கும் தற்போதைய மென்போக்கும் ஒப்பிடப்படுவதுடன் வேறுபடுத்தியும் காட்டப்படுகின்றன. ஜனாதிபதியின் வெற்றிகரமான விஜயம் இந்தியாவுடனான ஜே.வி.பி.யின் உறவு ஒரு மறு தலையான நேர்மறைத் திருப்பத்தை எடுத்திருக்கிறது என்பதை காட்டுகிறது.

ஜே.வி.பி. அதன் ஆரம்பத்தில் இருந்தே இந்திய எதிர்ப்பு வாதத்தில் ஆழக்காலூன்றிய கட்சியாகும். எளிதான வார்த்தைகளில் கூறுவதானால் ஜே.வி.பி. இந்தியாவுக்கு எதிரான, சீனாவுக்கு ஆதரவான ஒரு அரசியல் இயக்கமாக கருதப்பட்டது. அது இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை எதிர்த்ததுடன் 1987 தொடக்கம் 1989 வரை இந்திய எதிர்ப்பு வன்முறைக் கிளர்ச்சி ஒன்றையும் முன்னெடுத்தது.

இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையில் 1987 ஜுலை 29 ஆம் திகதி முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கொழும்பில் வைத்து கைச்சாத்திட்டனர். தமிழீழ விடுதலை புலிகள் உட்பட ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுக்கும் இலங்கை ஆயுதப் படைகளுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலமாக இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் மெச்சத்தக்க ஒரு குறிக்கோளுக்காகவே உடனபடிக்கை கைச்சாத்திடப்பட்டது.

போர் நிறுத்தம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. அமைதியைப் பேணுவதற்காக இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் நிலைகொண்டது. எதிர்பார்க்கப்பட்டதை போன்று நிலைபேறான ஒரு சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு பதிலாக, இந்திய – இலங்கை உடன்படிக்கை மேலும் கூடுதல் வன்முறைக்கும் இரத்தக் களரிக்கும் வழி வகுத்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலை புலிகள் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்து மீண்டும் போரை ஆரம்பித்தது. விரைவாகவே வடக்கிலும் கிழக்கிலும் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக விடுதலை புலிகள் முழுஅளவிலான கெரில்லாப் போரை தொடுத்தது.

## ஜே.வி.பி.யின் 2வது கிளர்ச்சி

அதேவேளை றோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி.யும் இந்திய இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து பிரதானமாக சிங்களப் பகுதிகளில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது. பிரதமல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியில் இருந்த போது 1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. ஒரு ஆயுதப் போராட்டத்தை தொடங்கியது. அந்த போராட்டம் பல்வேறு நாடுகளின் உதவியுடன் கொடூரமான முறையில் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டது. இது பொதுவாக முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சி என்று அழைக்கப்படுகிறது.

இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சி ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கத்துக்கும் அவருக்கு பிறகு பதவிக்கு வந்த ஜனாதிபதி ரண சிங்க பிரேமதாசவினதும் அரசாங்கங்களுக்கு எதிரானது. அந்த கிளர்ச்சி ஜே.ஆர். ஜனதிபதியாக இருந்த போது தொடங்கி ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியில் 1989.: 90 காலப்பகுதியில் முடிவுக்கு வந்தது. ஜே.வி.பி. அதன் இரண்டாவது கிளர்ச்சியை 1987 ஆம் ஆண்டில் தொடங்கிய போது தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும் பான்மையாக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதற்கு சொற்ப எண்ணிக்கையான உறுப்பினர்களே இருந்தனர். அதனால் ஜே.வி.பி.யின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஏனைய ஏழு மாகாணங்களிலேயே இடம்பெற்றன.

ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்பு இராணுவப் பிரிவுக்கு தேசபக்த மக்கள் இயக்கம் ( தேசப்பிரேமி ஜனதா வியாபாரய ) என்று பெயர் வைக்கப்பட்டது. மக்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கத்துடனேயே தேசபக்திக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. தேசப்பிரேமி ஜனதா வியாபாரயவின் தளபதிக்கு கொடுக்கப்பட்ட இயக்கப் பெயருக்கு ஒரு வரலாற்று காரணமும் இருந்தது. கீர்த்தி விஜேபாகு என்பதே அந்தப் பெயர்.

பத்தாவது நூற்றாண்டில் இளவரசர் கீர்த்தி சோழ மன்னர்களான ராஜராஜனுக்கும் இராஜேந்திரனுக்கும் எதிராகப்போரிட்டார். அந்த றுஹுணு இளவரசர் இறுதியில் சோழப் படையெடுப்பாளர்களை பொலன்னறுவையில் இருந்து விரட்டுவதில் வெற்றி கண்டு தன்னை விஜேபாகு மன்னனாக முடிசூடிக்கொண்டார். தேசப்பிரேமி ஜனதா வியாபாரயவின் தளபதி கீர்த்தி விஜேபாகுவின் உண்மையான பெயர் சமான் பியசிறி பெர்னாண்டோ. மொறட்டுவை லுணாவ பகுதியைச் சேர்ந்த அவர் களனி பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரி.



மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலமாக நீடித்த இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது ஜே.வி.பி.யினாலும் பொலிஸ், இராணுவம் மற்றும் பரா இராணுவக் குழுக்கள் உட்பட கிளர்ச்சி தடுப்பு படைகளினாலும் ஆயிரக்கணக்கான மக்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் அரச ஏஜென்ட்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு படைகளினாலும் அரசின் ஏனைய ஏஜென்ட்களினால் கொலாலப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக நம்பகமான மதிப்பீடு எதுவும் கிடையாது என்கிற அதேவேளை ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உத்தியோகபூர்வ விபரங்கள் அரசினால் வெளியிடப்பட்டன.

அநுரா குமார திசாநாயக்க உட்பட ஜே.வி.பி.யின் இன்றைய முன்னரங்க தலைவர்களில் பலர் இந்திய எதிர்ப்பு போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இயக்கத்தில் இணைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தாய்நாட்டின் மீதான பற்று, அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் என்று நோக்கப்பட்ட இந்தியா மீதான வெறுப்பு என்ற இரட்டை உணர்வினால் அவர்கள் தூண்டப்பட்டனர். இந்திய – இலங்கை உடன்படிக்கையையும் அதன் விளைவான அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தையும் இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டவை என்று அவர்கள் கருதியதால் மிகவும் கடுமையாக எதிர்த்தார்கள். முரண்நிலை என்னவென்றால் தமிழர்கள் மத்தியில் இருந்த கடும் போக்காளர்களும் அவற்றை எதிர்த்தது தான்.

## இந்திய – இலங்கை உடன்படிக்கை

இந்திய – இலங்கை உடன்படிக்கை குறைபாடுகள் இல்லாதது அல்ல. தமிழர்களின் சகல பிரச்சினைகளையும் அது சீர்செய்யவில்லை. ஆனால் அது பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதை நோக்கிய ஒரு குணப்படுத்தல் செயன்முறைக்கான நல்லதொரு பெரிய தொடக்கமாக அமைந்தது. இந்திய – இலங்கை உடன்படிக்கை இலங்கையை பல இனத்தவர்களும் பல மதத்தவர்களும் வாழ்கின்ற ஒரு தேசம் என்று அங்கீகரித்தது. அதனால் சிங்கள மேரினவாதிகளின் ஓரினத்துவ உரிமை கோரலும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் இரு தேசக் கோட்பாடும் நிராகரிக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஏனைய இனத்தவர்களுடன் சேர்ந்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்துவந்த அவர்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் என்று உடன்படிக்கை அங்கீகரித்தது. அதனால் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வரலாற்று வாழ்விட உரிமை அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பிரத்தியேக உரிமை இல்லை. வடக்கு – கிழக்கு பிராந்தியம் சகல இனங்களுக்கும் சொந்தமானது.

மேலும், தனியான ஒரு தமிழ்பேசும் மாகாணம் உருவாக்கப்படுவதற்கு அந்த நேரத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டது. இணைப்பை அங்கீகரிப்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இரு மாகாணங்களும் தற்காலிகமாக இணைக்கப்பட்டன.

மாகாண அடிப்படையில் அதிகாரப்பரவலாகல் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. உத்தியோகபூர்வமொழி அந்தஸ்துக்கு தமிழ் உயர்த்தப்பட்டது. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த சகலருக்கும் உத்தியோகபூர்வ மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆயுதமேந்திய சகல தீவிரவாதிகளுக்கும் பொதுமன்னிப்பு ஒன்று வழங்கப்பட்டது.

இந்திய – இலங்கை உடன்படிக்கை படிப்படியாக நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில் இலங்கை தமிழர்களின் அடிப்படை மனக்குறைகளையும் நியாயபூ ர்வமான அபிலாசைகளையும் சீர்செய்து நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்று அப்போது தோன்றியது. தவிரவும், பொதுவில் உடன்படிக்கையினதும் குறிப்பாக 13 வது திருத்தத்தினதும் நடைமுறைப்படுத்தலையும் உத்தரவாதப் படுத்த இந்தியா இருந்தது.

## 13வது அரசியலமைப்புத் திருத்தம்

அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் கொழும்பில் வரையப்பட்டது. ஒரு ஆலோசகர் என்ற அந்தஸ்தில் இந்திய அரசியலமைப்பு சட்ட அறிஞர் ஒருவருடன் கலந்தாலோசனை நடத்தப்பட்டது. அந்த நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிடமிருந்தும் ஜே.வி.பி.யிடமிருந்தும் கிளம்பிய கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில், (உயர் நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில்) தேசிய ரீதியான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை வேண்டி நிற்கும் எந்தவொரு அரசியலமைப்பு திருத்தமும் நிறைவேற்றப் படமாட்டாது என்று அஞ்சப்பட்டது.

அதனால் 13 வது திருத்தத்தின் ஊடான உத்தேச மாகாண சபைகளின் அதிகாரங்களும் உறுப்பாமைவும் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டது. இதன் காரணத்தினால் 13 வது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதித்தது. (27ம் பக்கம் பார்க்க)

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பும் 13வது திருத்தமும்

(26ம் பக்கத் தொடர்ச்சி) ஒன்பது நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு ஐந்து நான் காக பிரிந்தே அந்த தீர்ப்பை வழங்கியது. குறிப் பிட்ட ஒரு காலவரையறைக்குள் மாகாணசபை களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதாக ஜே.ஆர். ஜெயவர்தனவிடம் இருந்து எழுத்து மூல உறுதிமொழியை இந்தியா 1987 நவம்பர் 7 ஆம் திகதி பெற்றுக் கொண்டது. ஆனால், நிகழ்வுகள் வித்தியாசமான ஒரு திருப்பத்தை எடுத்தன. இந்த உறுதிமொழி ஜெயவர்தனவினாலோ அல்லது பிறகு பதவிக்கு வந்த அரசாங்கங்களினாலோ ஒருபோதும் காப்பாற்றப்படவில்லை. இந்திய இராணுவத்துக்கு எதிரான விடுதலை புலிகளின் சண்டை தீவிரமடை ந்தது. இது நிலைவரத்தை மாற்றியமைத்தது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமைதிகாப் போராக இந்தியப்படைகள் இலங்கையில் வந்திற ங்கிய போது சிங்களத் தெற்கு ஆவேசத்துடன் எதிர்த்தது. ஆனால் தமிழ் வடக்கு – கிழக்கு ` ஜவான்களைமுழுமனதுடன் வரவேற்றது ஆனால் இந்திய இராணுவத்துடன் விடுதலை புலிகள் மோதத் தொடங்கியதை அடுத்து ஒரு சில மாதங் களுக்குள் நிலைவரம் தலைகீழாக மாறியது.

மறுவார்த்தைகளில் சொல்வதானால், நடுவர் இப்போது களத்தில் இறங்கி விட்டார்.` இந்திய அமைதிகாக்கும் படையின் (Indian Peace Keeping Force) தோற்றம் இப்போது அப்பாவி களை கொலை செய்யும் படையாக (Innocent People Killing Force) மாறியது. இந்தியப்படை கள் இறுதியாக 1990 மார்ச்சில் இலங்கையை விட்டு வெளியேறியபோது அதற்காக கவலைப்பட எவரும் இருக்கவில்லை.

### நலன்களின் சங்கமம்

பிரதானமாக, இந்தியா இலங்கையில் தீங்கற்ற முறையில் தலையீடு செய்தபோது அதன் சொந்த நலன்களின் அடிப்படையில் செயற்றட்டது. இந்தியாவின் நலன்களுக்கும் தமிழர்களின் நலன் களுக்கும் இடையில் ஒருமை இருக்கவில்லை. ஆனால் இரு தரப்பினரதும் நலன்களும் நிச்சயமாக ஒருமுகப்பட்டன. ஆனால் அந்த இசைவு அதற் குரிய மட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.

ஆயுதப் போராட்டத்தை நெருக்குதலைக் கொடு ப்பதற்கான அல்லது பேரம்பேசலுக்கான ஒரு கருவியாக பயன்படுத்தியது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருந்தது. ஆனால், புதுடில்லியை மீறி தனிநாடு ஒன்றுக்காக போராட்டத்தை நீடித்தது ஏற்புடையதாக இருக்கவில்லை. ஐக்கியப்பட்ட ஒரு இலங்கைக்குள் சுயாட்சிக்கு இந்தியா ஆதர வாக இருந்த அதேவேளை தமிழீழத்தை எதிர்த் தது.

### இந்தியாவின் பொறுப்பு

சமாதான உடன்படிக்கை பல்வேறு விடயங்களுக்கு மத்தியில், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் வாழும் சகல சமூகங்களினதும் பாது காப்பையும் பத்திரத்தையும் உறுதிப்படுத்தும் பொறுப்பை (இலங்கையுடன் சேர்த்து) இந்தியா வுக்கு ஒப்படைத்தது. வடக்கு, கிழக்கு மாகாண ங்களில் வாழ்கின்ற சகல சமூகங்களினதும் பௌதீ கப் பாதுகாப்பையும் பத்திரத்தையும் உறுதி செய்வதில் இலங்கையினதும் இந்தியாவினதும் அரசாங்கங்கள் ஒத்துழைத்துச் செயற்படும் என்று உடன்படிக்கையின் பிரிவு 2.16 ( ஈ) கூறுகிறது. உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முன்மொழிவு களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கிக் கொண்ட அதேவளை இந்தியா தீர்மானங்களை உத்தரவாதப் படுத்துவது டன் இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படு த்துவதற்கும் ஒத்துழைக்கும் என்று உடன்படி க்கையின் பிரிவு 2.14 கூறியது.

தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்தும் பொறுப்பு இந்தியாவுக்கு இருந்ததால் இலங்கையின் விவகாரங்களில் அதன் நிலைப்பாடுகளை தெரிவிக்கும் ஒரு நிரந்தர வாய்ப்பு (Say) இந்தியாவுக்கு இருந்தது. அத் துடன் குறைந்த பட்சம் கோட்பாட்டு அளவிலா வது வடக்கு, கிழக்கில் வாழும் சகல மக்களின தும் பாதுகாப்புக்கும் பத்திரத்துக்கும் இந்தியா வுக்கு பொறுப்பு இருந்தது.

இந்திய – இலங்கை உடன்படிக்கை பல வருடங் களாக ` மறக்கப்பட்டு விட்டாலும்` , அது இன்ன மும் செல்லுபடியாகக் கூடியதாகவே இருக்கிறது. அவசியம் ஏற்படும்போது உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மீண்டும் செயற்படுத்த முடியும். இரு நாடுகளுமே வேண்டாமென்று மறுதலிக்காத பட்சத்தில் இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்ந்து செல்லுபடியாகக் கூடியதாகவே இருக் கும். ஒரு நாடு அதிலிருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேற முடியாது.

### இந்தியப் பிரதமருக்கு கூட்டாகக் கடிதம்

சில வருடங்களுக்கு முன்னர் குறிப்பிடத்தக்க ஒரு அரசியல் நடவடிக்கையாக, அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தச் செய்வதற்கு உதவியை நாடி பிரதானமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு அரசியல் கட்சிகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டாக ஒரு கடிதத்தை எழுதின. அதன் வரைவு 2021 டிசம்பர் 29 பூர்த்தி செய்யப்பட்டு 2022 ஜனவரி 6 சம்பந்தப்பட்ட கட்சிகளினால் அங்கீகரிக்கப் பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட் ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி. ஆர்.எல்.எவ்.), தமிழ் மக்கள் கட்சி மற்றும் தமிழ் தேசிய கட்சி.ஆகியவையே அந்த கடிதத்தில் கைச்சாத்திட்டவையாகும். அந்த கடிதம் இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் முகங்கொடு க்கும் முக்கியமான பிரச்சினைகளை விளக்கும் ஒரு இணைப்புடன் சேர்த்து கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் நல்லெண்ண உதவியூடாக பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்கப் பட்டதாக கூறப்பட்டது. இலங்கையில் தமிழ் மக்களின் அவசரமான அக்கறைக்குரிய விடயங்கள் ஏழு வகைகளின் கீழ் இணைப்பில் உள்ளடக்க ப்பட்டிருந்தன.அவையாவன

### 13வது திருத்தமும் மாகாணசபைகளும்

இந்திய இலங்கை உடன்படிக்கையை தொடர்ந்து பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் இணங்கிக் கொள்ளப்பட்ட மூலமுதல் ஏற்பாடுகளில் இருந்து பறிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு, நிதி, நிலம், கல்வி மற்றும் விவசாய சேவைகள் தொடர்பான சகல ஏற்பாடுகளையும் மீண்டும் கொண்டு வர வேண் டும். இலங்கை ஜனாதிபதிகளினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களும் இதில் அடங்கும்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு மாகாணசபை தேர்தல் களை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை கோர வேண்டும்.

### மொழி உரிமைகள் – 16வது திருத்தம்

பதின்மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்ட தைத் தொடர்ந்து விரைவாக 1988 டிசம்பர் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தத் தின் ஏற்பாடுகள் முழுமையாக சொலலுக்குச் சொல் உணர்வின் அடிப்படையில் நடைமுறைப் படுத்த ப்படவேண்டும்.

அரசாங்க மொழிகளாக சிங்களத்தினதும் தமிழின தும் பயன்பாடும் பதின்மூன்றாவது திருத்தத்திலும் பதினாறாவது திருத்தத்திலும் இரு மொழிகளுக் கும் தேசிய மொழிகள் என்றும் ஆங்கிலத்துக்கு இணைப்பு மொழி என்றும் வழங்கப்பட்ட அங்கீ காரம் சொல்லுக்குச் சொல் உணர்வின் அடிப்படை யில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

தேசிய மொழிகள், நிருவாகம், சட்டவாக்கம், நீதித்துறைஆகியவற்றில் அவற்றின் நடைமுறைப் படுத்தல் மற்றும் பாடசாலைகளில் போதனா மொழிகள் போன்ற விடயங்களைக் கையாளும் 18 தொடக்கம் 25ஏ சரத்துக்களை உள்ளடக்கிய அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் முழுமையாக சொல்லுக்குச் சொல் மற் றும் சாராம்சத்தின் அடிப்படையில் நடைமுறை ப்படுத்தப்படவேண்டும்.

### குடிப்பரம்பல் – எல்லை நிர்ணயம்

பண்டா – செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி – செல்வா ஒப்பந்தம் ( 1965), மற்றும் இந்திய – இலங்கை உடன்படிக்கை (1987) ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கும் உணர்வுக்கும் முரணாக வடக்கிலும் கிழக்கிலும் குடிப்பரம்பல் அமைப்பை திட்டமிட்ட முறையில் மாற்றுவதற்கு மேற்கொள்ள ப்படும் சகல முயற்சிகளும் உடனடியாக நிறுத்தப் பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் வரலாற்று ரீதியான வாழிடங் களை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக உறுதிப்படுத்தும் சான்றுகளை நிர்மூலஞ் செய்வத ற்கு அல்லது திரிபுபடுத்துவதற்கு தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, வனம் மற்றும் வனவிலங்கு திணைக்களம், சுற்றுலாத் துறை, பாதுகாப்பு – உள்நாட்டு பாதகாப்பு அமைச்சு ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பௌத்த காலத்துக்கு முன்பிருந்தே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்துவருகிறார்கள் என்ற அவர் களின் தொல்பழமையை தொல்லியல் திணைக்



களம் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன் இலங் கைக்குள் பௌத்தத்தை ( தமிழ்ப் பௌத்தர்கள்) தமிழர்களே வரவேற்றவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டு வரலாற்றை திரிபுபடுத்தும், மழுப்பும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்து க்கும் இடையிலான எல்லைப் பிரதேசங்களில் உள்ள தமிழ்க்கிராமங்களை சிங்கள பகுதிகளுடன் இணைப்பதன் மூலம் அல்லது சிங்களப் பகுதி களை தமிழ்க் கிராமங்களுக்குள் கொண்டு வருவ தன் மூலம் தமிழர்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராக்குவதற்காக இனத்துவ அமைவு மாற்றியமைக்கப்படுகிறது. இதனால் உள்ளூராட்சி சபைகள், மாகாணசபை கள் மற்றும் பாராளுமன்றத்தில் அரசியல் பிரதி நிதித்துவத்தை பெறுவதில் இருந்து தமிழர்கள் தடுக்கப்படுகிறார்கள். அத்தகைய பெருங்கேடான நடைமுறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

### குடியுரிமையும் சமத்துவமும்

இலங்கையின் அண்மைய இந்திய வம்சாவளி மக்களுக்கு முழுமையான குடியுரிமையை வழங்கு வதாக உறுதியளித்த இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் செய்துகொண்ட நேரு – கொத்தலாவல ( 1954), சிறிமாவோ – சாஸ்திரி (1964), சிறிமாவோ – இந்திரா (1974) உடன்படி க்கைகளின் நோக்கமும் உணர்வும் அந்த மக்களுக்கு காணியுரிமை, வீட்டுரிமை, வாழ்வா தாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் அரசியல் பிரதி நிதித்துவத்தை அவர்களுக்கு கிடைக்கச் செய் வதேயாகும். ஆனால் அவை மீறப்பட்டு அலட்சி யப்படுத்தப்படுகின்றன. அவர்களுக்கான சமத்துவ உரிமை மறுப்பும் பாகுபாடும் இல்லாமல் செய்யப் பட்டு அவர்கள் முழுமையான குடிமக்களுக்குரிய சகல உரிமைகளையும் கொண்டவர்களாக வாழ் வதை உறுதிப்படுத்த வேண்டும்.

### பயங்கரவாத் தடைச்சட்டத்தின் கீழான கைதிகள்

பிரதானமாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகப் (22ம் பக்கம் பார்க்க)